www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்

# கண்ணோட்டம்

KANNODDAM

கண்ணோட்டம்

வெளியீடு – 65 | 20 ஜனவரி 2013 | விலை ரூபா :- 10.00

# அதிகாரப்பகிர்வு ஏன் ?

**இந்தக் காலத்தில் இன அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கல் தேவையில்லை என்பது யதார்த்தத்திற்கு புறம்பானதும் சமகால வாழ்வியலுக்கு எதிரானதுமாகும் அனைத்துக் கட்சிகளின் பாராளுமன்றக் குழு செயற்படுவதற்கான சூழல் சாத்தியமானால் அதிகாரப்பரவலாக்கல், இன சமூகங்களிடையே நல்லுறவு இவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும். இன- மனித உரிமைப் பிரச்சனைகள் தொடர்பான சர்வதேசத்தின் அக்கறைகள் உதாசீனப்படுத்தப்பட முடியாதவை**

நவீன அரசியலில் மக்கள் பங்கு பற்றுதல் என்பது முன் எப்போதையும் விட முக்கியமான விடயமாகும் டுவிட்டர், பேஸ்புக், கூகிள் சக என வெகு ஜனங்கள் பங்கு பற்றக் கூடிய வலைத் தளங்கள் வந்து விட்டன.

ஒவ்வொரு விடயத்திலும் வெகுஜனங்களின் கருத்துக் கணிப்பு என்பது இன்று சாதாரண விடயமாகி வருகிறது.

தகவல்களை அறிவதற்கான சாதாரண மனிதனின் சுதந்திரம் வலுவடைந்துள்ளது. இந்தக் காலத்தில் இன அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கல் தேவையில்லை என்பது யதார்த்தத்திற்கு புறம்பானதும் சமகால வாழ்வியலுக்கு எதிரானதுமாகும். வறுமையை ஒழித்தல், சகலவிதமான சமத்துவமின்மைகளையும் காலாவதியாக்குதல் குறிப்பாக எமது சூழலில் சாதி, பெண் அடிமைத்தனம் ஆகியவற்றின் வக்கிரமான இருப்பை உணருதலும் செயற்படுதலும் மனிதர்கள் பரஸ்பரம் கண்ணியமாக நடந்து கொள்ளுதல் என்பன முக்கியமான விடயங்களாகும்

இன அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கெதிரான ஏகபோக அதிகாரம் எவ்வளவு அகங்காரமானதோ அதே அளவிற்கு ஊடக ஏகபோக அதிகார அகங்காரங்களும் ஆபத்தானதாகும்.

(தொடர்ச்சி 4 ம் பக்கம் பார்க்க)



# கண்டிக்கிறோம்

**உதயன் ஊழியரை தாக்கி பத்திரிகைகள் தீயிடப்பட்ட சம்பவத்தையும், சம உரிமை இயக்கதின் அமைதிவழி போராட்டம் கழிவு எண்ணை வீசி குழப்பப்பட்ட சம்பவத்தையம் கண்டிக்கிறோம்.**

உதயன் பத்திரிகை விநியோகப்பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் நா.பிரதீபன் வடமராட்சி மாலிசந்தியில் வைத்து ஜனவரி 10ம் திகதி தாக்கப்பட்டதுடன் அவர் எடுத்துச் சென்ற பத்திரிகைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இத் தாக்குதல் சம்பவத்தை பத்மநாபா ஈபிஆர்எல்எவ் சார்பாக கண்டிக்கிறோம். தாக்குதலுக்குள்ளான பிரதீபன் எடுத்துச் சென்ற பத்திரிகைகள் தீக்கிரையாக்கப்பட்டமை தாக்குதல் நடத்தியவர்களின் நோக்கத்தை தெளிவுபடுத்துவதாயுள்ளது.

உதயன் பத்திரிகை தகவல் அறியும் உரிமைக்கு மதிப்பளிக்கின்ற, அனைவரதும் கருத்துச் சுதந்திரத்தை நிலைநிறுத்த பாடுபடுகின்ற ஒரு பத்திரிகை என அடையாளப்படுத்த முடியாதபோதும் பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதனை ஒரே குரலில் வலியுறுத்த விரும்புகின்றோம்.

நம் மத்தியில் பத்திரிகையாளர்கள் மீது நடாத்தப்படும் தாக்குதல்கள் மட்டுமே பத்திரிகைச் சுதந்திரத்தை சிதைக்கும் முனைப்புக்கள் என கருதிவிட முடியாது. ஊடகங்களின் மிகைப்படுத்தல்களும், மூடிமறைத்தல்களும், புனைவுகளும் கூட பத்திரிகைச் சுதந்திரத்தை கேட்விக்குட்படுத்துவனவாகும்.

ஒவ்வொரு கருத்துக்கும் பின்னால் ஒரு வர்கத்தின் நலன் புதைந்திருக்கிறது எனவே நடுநிலை என்று கூறுவது போலியானதாகும்.

அரசாங்க ஊடகங்கள் அரசாங்கதின் ஊதுகுழல்களாக செயற்படுவதாக குற்றம்சாட்டிக் கொண்டே சுதந்திர ஊடகங்கள் எனச்

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)

# ஏமாற்றம்



றிசானா நபிக் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டது குறித்து ஏமாற்றமும் நம்பிக்கையீனமும் அடைந்துள்ளதாக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 9 ம் பக்கம்)

# தோழர் றொபேட் பிறந்த தினம்



தோழர் ரஞ்சன் எனவும் றொபேட் எனவும் எம்மால் அன்போடு அழைக்கப்பட்ட தம்பிராசா சுபத்திரன் அவர்களின் 55 வது பிறந்தநாள் 2012 மார்கழி 24 ஆகும். சாவகச்சேரியிலுள்ள நுணாவில் தோழர் றொபேட் பிறந்து, வளர்ந்த இடம். இறுதியாக அவர் யாழ் மத்திய கல்லூரியில் கல்வி கற்றார்.

2003 ஆனி 14 அன்று, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) யாழ் பிராந்திய அலுவலக கட்டிட மொட்டை மாடியில், அதிகாலை உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை தோழர் றொபேட், புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். புலிகள், நோர்வே அர

(தொடர்ச்சி 3 ம் பக்கம் பார்க்க)

# வரலாற்றில் கறைபடிந்த நாள்

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் வேறுபட்ட அபிப்பிராயங்களுடன் வெவ்வேறு கட்சிகளின் இருப்பு நிராகரிக்கப்பட்டது**

1986 மார்கழி 13, இந்நாளில் தான் ஈபிஆர்எல்எப் புலிகளால் தடை செய்யப்பட்டது. 1986 ஏப்பிரலில் ரெலோ பின்னர் புளொட், என்எல்எப்ரி, பிஎல்எப்ரி என்று தடை செய்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி, இடதுசாரிகள் தொழிற்சங்கங்கள் சுதந்திரமான ஸ்தாபனங்களின் செயற்பாடுகளை முடக்கினார்கள். தமிழ் பாசிசத்தின் ஒரு முக்கிய காலகட்டமே இது. வேறுபட்ட அபிப்பிராயங்களுடன் வெவ்வேறு கட்சிகளின் இருப்பு நிராகரிக்கப்பட்டது.

இது வெறுமனே வெவ்வேறு கட்சிகள் தலைவர்கள் என்பதனுடன் நிற்கவில்லை.

**- தோழர் சுகு -**

சக சமூகங்கள், அண்டை நாட்டின் தலைவர் என விரிந்தது. இந்த "வரலாற்று விபரீதங்கள்" தான் பிரதானமாக தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்காமல் செய்தது.

வரலாற்றில் இழைக்கப்படும் பாரதூரமான தவறுகளுக்கு என்றோ ஒரு நாள் விலை செலுத்தவேண்டியே வரும். அது நிகழ்ந்

(தொடர்ச்சி 7 ம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர் நீக்கம்



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை பதவி நீக்கம் செய்யும் குற்றப் பிரேரணை நாடாளுமன்றத்தில் 11.01.2012 அன்று இரண்டாவது நாள் விவாதத்தின் பின்னர் வாக்களிப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 155 வாக்குகளும், எதிராக 49 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

புதிய நீதியரசராக மொகான் பீரிஸ் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(தொடர்ச்சி 5 ம் பக்கம்)

**மக்களுக்கு புதியவன் அல்ல**



**2013 ம் நிகழட்டும் நன்மைகள்**



**தோழர்களை நினைவு கூருவோம்**



**அருகி வரும் அற உணர்வுகள்**



www.padippakam.com



கண்ணோட்டம்
KANNODDAM
294, கண்டிவீதி, புங்கன்குளம் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



# யுத்தம் முடிவடைந்தும் எட்டாக்கனியாயிருக்கும் தீர்வு

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுத்து வருவதாக பதவிக்கு வந்த முன்னைய அரசாங்கங்கள் போன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கமும் அவ்வப்போது தெரிவித்தாலும் யுத்தம் முடிவுக்கு வந்து 4 வருடங்களை எட்டவுள்ள போதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் உருப்படியான அரசியல்தீர்வு எதனையும் அவரது அரசாங்கம் முன்வைக்கத் தவறிவிட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் காலத்திலேயே இனப்பிரச்சினைக்கு தனது அரசாங்கம் தீர்வுகாண விரும்புவதாக ஜனாதிபதி தெரிவித்ததாக அண்மையில் கூட செய்திகள் வெளியாகியிருந்தன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவை நியமித்து இக்குழுவின் அறிக்கையையும பெற்றுக்கொண்ட இந்த அரசாங்கம் இந்த அறிக்கையின் அடிப்படையில் இனப்பிரச்சினை தீர்விற்கான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாமலே இப்போது இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்க முன்வந்திருப்பதாகவும் இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை எனவும் குற்றம்சாட்டி வருகின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை பெற்றிருப்பதுடன் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து, பாராளுமன்றத்தில் பலமான நிலையில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இந்த நாட்டில் நீடித்த, நிலையான அமைதியம் சமாதானமும் நிலவும் வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்காது பின்னடித்துக்கொண்டிருக்கின்றது.

அதிகாரப்பகிர்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியல் தீர்வு குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்ற பாடங்களும், நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அத்துடன் இது குறித்த பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத்தின் கருத்துக்கள் அடிப்படையாக அமைய வேண்டும் எனவும் தனது பரிந்துரையில் அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்டியுள்ளது. இருப்பினும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான நகர்வுகளில் எவ்வித முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

அதேசமயம் 13 வது திருத்தத்தை இல்லாமற் செய்ய வேண்டும், அதிகாரப்பகிர்வு அவசியமில்லை என்ற குரல்களும் அரசாங்க தரப்பின் உள்ளேயே மேற்கிளம்பி வலுவடைந்து வருவதை காணக்கூடியதாய் உள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் தமிழர் தரப்பின் முயற்சிகளும் திருப்தி தருவனவாய் இல்லை. தமிழர் தரப்பு ஒருமித்த குரலில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கான திட்ட வரைபு எதனையும் இதுவரை பகிரங்கமாக முன்வைக்கத் தவறிவிட்டது.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் நாச்சியப்பன் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தமது ஒருமித்த கருத்தை, அதற்கான திட்டத்தை முன்வைக்க முடியவில்லை. அவ்வாறான ஒரு திட்டத்தை முன்வைப்பதற்கு தொடர்ச்சியாக கலந்துரையாட வேண்டியிருப்பதாக அவர்கள் நழுவிக்கொண்டனர்.

எத்தகைய ஒரு தீர்வை முன்வைத்தாலும் அதில் குறைகளை சொல்லி அதிலிருந்து விலகிக் கொள்கின்ற ஒரு போக்கு தமிழர் தலைமைகளிடம் தொடர்ச்சியாக காணப்படுவதையும் நாம் மறுக்க முடியாது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் சாத்தியமான 13 வது திருத்தம், மாகாணசபை முறைமை என்பன தமிழ் மக்களுக்கு கிடைத்த சிறந்த வாய்ப்பு என இப்போது கூறுகின்ற பலர் அது நடைமுறைக்கு வந்தபோது அதனை குறை கூறி ஒதுங்கியிருந்தனர்.

சந்திரிகா குமாரணதுங்கா முன்வைத்த தீர்வுத்திட்டம் குப்பை தொட்டியில் வீசப்பட்ட பின் சிலாகித்துப் பேசியவர்கள் சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் அந்த தீர்வுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அங்கீகாரத்தை கோரிநின்றபோது ஆதரவளிக்க முன்வரவில்லை.

புலிகள் இருக்கும் வரை தனிநாட்டை தவிர சாத்தியமான வேறொரு தீர்வு குறித்து கூட்டமைப்பினரால் பேச முடியவில்லை.

தாமே தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினை தீர்வுக்காக பல பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருக்கிறது. ஆனால், இப்போதும் தமக்கு சரியெனப் படுகின்ற நியாயமான அரசியல் தீர்வொன்றை முன்வப்பதற்கு தயங்குகின்றனர். முன்வைக்கின்ற தீர்வு திட்டம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள புலிகள் ஆதரவு சக்திகளின் அதரவை பெற தவறிவிட்டால் தங்கள் பாராளுமன்ற கதிரைகளுக்கு ஆபத்து வந்துவிடும் என்ற அச்சமே அவர்களின் இந்த தயக்கத்திற்கு காரணமாயிருக்கிறது.

ஏற்கனவே புலிகளின் ஆதரவோடு, புலிகளின் கருத்துக்களை வலியுறுத்தி தமது பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றிக்கொண்டவர்கள் தங்களுடைய சொந்தக் கருத்துக்களின் வலிமையினால் மக்களின் ஆதரவை திரட்டமுடியும், தேர்தல் வெற்றியை தக்கவைத்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இன்னும் அவர்களுக்கு ஏற்படவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வை எட்டும் முயற்சியில் அரசாங்கமம், தமிழர் தரப்பும் கடும் போக்காளர்களின் அழுத்தங்களுக்க பணிந்து

## பிள்ளையான் அரசியலுக்கு புதியவன்

# மக்களுக்கு அல்ல

### அரசாங்கத்துடன் இணைந்திருந்தாலும் மக்கள் நலனே எனது குறிக்கோள் எனது கடந்த கால மாகாண சபை ஆட்சி இதற்குச் சான்று பகரும்

**உள்ளூராட்சி மன்றங்களை மக்களே பலமானதாக மாற்ற வேண்டும். அப்போதுதான் அதனது முழுமையான பயனையும் மக்கள் அனுபவிக்க முடியும் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும், கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சி. சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் மேற்கு பிரதேச சபையின் (கொக்கட்டிச்சோலை) புதிய அலுவலகக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

### தட்டிக்கேளுங்கள்

2008ம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலிலே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மட்டு மாநகர சபை உட்பட 8 தமிழ் உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றியது. அதன் பின்னர்தான் உள்ளூராட்சி மன்றங்கள் என்றால் என்ன? அதன் பயன்பாடு மக்களுக்கான உறவு என்ன? என்பதை எல்லாம் மக்கள் புரிந்து கொண்டார்கள். அதற்கு முன்னர் இதனை ஆட்சி செய்த தமிழ் கட்சி என்று சொல்லப்படுகின்ற கட்சியினரால் அச்சபைகளை சரியாக நிர்வகிக்க முடியவும் இல்லை அதனை அவர்கள் சரிவர செயற்படுத்தவும் இல்லை. ஏன் நான் இதனை குறிப்பிடுகின்றேன் என்றால், பெரும்பாலான சபைகள் சாதாரண கட்டிடங்களில்தான் இயங்கிவந்திருக்கின்றன. அலுவலக செயற்பாடுகளை சரிவர அவர்கள் செய்யவில்லை என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

மக்களுக்கான சரியான சேவைகளை வழங்க வேண்டும் என்றால்தானே அவர்கள் அலுவலகக் கட்டிடங்களை புதிதாக அமைத்திருப்பார்கள். அவர்களுக்கு அது எல்லாம் தேவையில்லை. ஏன், இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை எடுத்துப் பாருங்கள், ஆலயடிவேம்பு பிரதேச சபையில் இவ்வாண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று நாவிதன்வெளி பிரதேச சபையில் தற்போது அமளி துமளி என்ன காரணம் என்றால் பொருத்தமற்ற பதவி நியமனம் என்கிறார்கள். திருகோணமலை நகராட்சி சபையில் ஊழல் இப்படியே வெருகல் பிரதேச சபையில், குடிநீர் வழங்கக்கூட தவிசாளர் எரிபொருள் செலவு கேட்கின்றாராம். எப்படி நிலைமை என்று பாருங்கள். முழுக்க முழுக்க மக்களுக்காகவே உருவாக்கப்பட்ட அரசுமுறைமை தான் உள்ளூராட்சி மன்றங்கள். அதனை ஆட்சி செய்பவர்கள் சரியாக வழிநடாத்தாவிட்டால் அதனை மக்கள் தட்டிக் கேட்க வேண்டும். ஏனெனில் உங்களது வரிப்பணத்திலே தான் அவர்கள் நிர்வாகம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் உங்களுக்கு சிறப்பான சேவையை ஆற்ற வேண்டும். இல்லையாயில் நீங்கள் தட்டிக் கேட்க வேண்டும். எனவேதான் நான் சொல்கின்றேன் உள்ளூரட்சி மன்றங்களை வலுவுள்ள ஆழுமை மிக்க சிறப்பான சபையாக மாற்ற வேண்டிய பொறுப்பு அப் பிரதேச மக்களைச் சார்ந்ததாகும். என அவர் தனது உரையில் அழுத்திக் கூறினார்.

### அரசியலில் குழந்தை



பழம்பெருங்கட்சி என்று தங்களை பறைசாற்றுகின்றவர்கள் சொல்கின்றார்கள் பிள்ளையானுக்கு என்ன தெரியும் அவர் அரசியலுக்கு குழந்தை என்கிறார்கள். நான் அரசியலுக்கு புதியவன்தான் ஆனால் மக்களுக்கு அல்ல. அதாவது பிள்ளையான் என்ன செய்கின்றான். என்ன அரசியலை பேசுகின்றான் என்று எனது மக்களுக்குத் தெரியும்.

அரசுடன் இணைந்திருந்தாலும் மக்களின் அதிகாரப் பகிர்வு விடத்திலும் அவர்களது உரிமை விடத்திலும் எப்படியான போக்கை நான் கடைப்பிடித்தேன் என்று கடந்த கால மாகாண சபை ஆட்சி சான்று பகரும். அவர்கள் ஒருவரியில் பிள்ளையான் அரசாங்கத்து ஆள்தானே! என்பார்கள். அரசுடன் இணைந்திருந்தாலும் மக்கள் நலனே எனது குறிக்கோள். இன்று யார்யாரெல்லாம் கிழக்கில் ஜனநாயகம் இல்லை அபிவிருத்தி இல்லை என்கின்றார்கள்.

நான் கேட்கின்றேன் இப்படிச் சொல்பவர்களுக்கு மட்டக்களப்பில் நடப்பதை பார்க்க கண் இல்லையா? கிழக்கில் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று மக்களுக்குத் தெரியும். மக்களுக்கு தெரிந்தால் போதும்.

### எங்கே ஜனநாயகம்?

ஜனநாயகம் ஜனநாயம் என்று நிமிடத்திற்கு ஒரு முறை உச்சரிக்கும் எனது அன்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். கிழக்கின் ஜனநாயகத்தின் திறவு கோல் ரி.எம்.வி.பி. என்பதனை அவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். பல கொலைகளைப் பரிந்துவிட்டு தப்பி ஓடியவர்கள் எல்லாம் மக்களிடம் வாக்கு கேட்கின்ற நிலைமை கிழக்கில் இருக்கிறதென்றால் அங்கே எந்தளவுக்கு ஜனநாயகம் இருக்கிறதென்பதை புரிந்துகொள்ளலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயகம் எங்கே? கடந்த மாகாண சபைத் தோர்தலிலே மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் இரா துரைரெட்ணம் பெற்ற வாக்குகள் 29,131 ஆகும். அடுத்தபடியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணி மற்றும் மட்டக்களப்பு தமிழரசுக் கட்சியின் இணைத் தலைவருமான துரைராஜசிங்கம் இவர் பெற்ற மொத்த வாக்குகள் 27,717 ஆகும். திருகோணமலை மாவட்டத்தில் தண்டாயுதபாணி பெற்ற வாக்குகள் வெறும் 20,190 ஆகும். ஆனால் கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சி தலைவர் பதவி யாருக்கு வழங்கப்பட்டது. வெறும் 20,000 வாக்குகளைப் பெற்ற தண்டாயுதபாணிக்கே வழங்கப்பட்டது. அப்ப எங்கையா உங்கட ஜனநாயகம்?

உண்மையில் முதலாவது இரா. துரைரட்ணத்திற்கு கொடுத்திருக்க வேண்டும். சரி அவர் பிற கட்சிக்காரர் அவருக்குக் கொடுக்கவில்லை. ஓரளவு நியாயம் என்றாலும் முழுக்க முழுக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தூண் என்று சொல்லப்படுகின்ற அனைத்து திறமைகளுமுள்ள துரைராஜசிங்கத்திற்காவது வழங்கி இருக்க வேண்டும். அதனையும் செய்யாமல் வெறும் 20,190 ஆயிரம் வாக்குகளைப் பெற்ற தண்டாயுதபாணிக்கு கொடுத்தது. நியாயமா? அல்லது ஜனநாயகமா? இதைக் கேட்டால் அது கட்சி முடிவாம். அப்படி என்றால் அந்தக் கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பில்லையா? அதாவது மக்களின் விருப்புக்கு அங்கே இடம் இல்லையா? தங்களது கட்சிக்குள்ளே ஜனநாயகத்தைப் பேண முடியாதவர்கள் பிறரது ஜனநாயகம் பற்றி பேச என்ன அருகதை இருக்கிறது என சிந்தித்தல் வேண்டும். "பிறருக்கு உபதேசம் செய்யும் போது அதனை நீ உன்னிடம் இருந்தே தொடங்கு" எனவும் சந்திரகாந்தன் (பிள்ளையான்) தனதுரையில் சுட்டிக்காட்டினார்

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் :-**

**P - Fach No: 506**
**Bern - 17,**
**Switzerland.**

**E.P.I.C., Box No: 95**
**95144 Garges Les,**
**Gonnesse Cedex,**

**P - Box No: 7183**
**Arumpakkam,**
**Chennai - 106,**
**India.**

294, கண்டி வீதி
புங்கங்குளம் சந்தி,

**E P I C**
**P.O. Box 431**
**Sutton SM1 9LE**
**UK**
email: eprlfp@yahoo.co.uk

159, கடல்முக வீதி,

www.padippakam.com



# தடைகளை தாண்டியது திவிநெகும




திவிநெகும (வாழ்வின் எழுச்சி) சட்டமூலம் 2/3 பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸவினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக 160 வாக்குகளும் எதிராக 53 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. 11 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. சட்ட மூலத்திற்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஈபிடிபி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், ஜனநாயக மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உருமய, லங்கா சமசமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகள் வாக்களித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜனநாயக தேசிய கூட்டணி, பிரஜைகள் முன்னணி ஆகிய கட்சிகள் சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்துள்ளன.

திவிநெகும சட்டவரைபில் மாகாணசபைகளுக்குரிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால் இச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாணசபைகளின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. வடக்கில் இன்னும் தேர்தல் நடாத்தி மாகாணசபை அமைக்கப்படாமையால் நடாத்தப் படாமையால் ஆளுநரின் ஒப்புதலை பெற்று பாராளுமன்றத்தில் சட்டத்தை நிறைவேற்ற எடுக்கப்பட்ட முயற்சிக்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. ஆளுநரின் ஒப்புதல், மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபையின் அங்கீகாரத்திற்கு ஈடாகாது என சுட்டிக்காட்டியது.

பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா தலைமையில் இவ் வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு சட்டவரைபின் சில சரத்துக்கள் அரசியலமைப்பிற்கு முரணானதென்றும் சில சரத்துக்கள் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் தீர்ப்பளித்தது.

இதன் அடிப்படையில் திருத்தங்களுடன் 08.01.2013 அன்று சமர்ப்பிக்கப்பட்ட திவிநெகும சட்ட வரைபு பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு தனித்தனியாக வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மாகாண சபைக்குரிய 15 அதிகாரங்களை திவிநெகும பறித்துவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளார். சமூர்த்தி ஊழியர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களாக உள்வாங்கப்படுவதை, அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கவிருப்பதை நாம் எதிர்க்கவில்லை. இவற்றை சாதாரண சட்டத்தின் மூலமே நிறைவேற்றியிருக்க முடியும். அதை இனிப்பு பூசிய கசப்பு மருந்தான திவிநெகும மூலம் ஏன் செய்ய வேண்டும்?

அரைகுறையாகவேனும் 13 வது திருத்தம் மாகாணசபைகளுக்கு வழங்கிய 15 அதிகாரங்களை திவிநெகும பறித்துவிட்டது. அபிவிருத்தியையும், வறுமை ஒழிப்பையும் மாகாண சபைகள் ஊடாக செய்யக் கூடாதா? என கேள்வி எழுப்பிய சுமந்திரன் திவிநெகும சட்டத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டும் எதிர்க்கவில்லை. பெரும்பான்மை இனத்தை சேர்ந்த புத்திஜீவிகளும் கையொப்பமிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டர்.

திவிநெகும சட்டமூலம் மாகாண சபைகளுக்குள்ள அதிராங்களை பறிப்பதாக விமர்சனங்கள் எழுந்தபோதும் அதிகாரப் பகிர்வை கோரி நிற்கும் சிறுபான்மை இனக் கட்சிகளும் இந்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளன. சட்டத்தின் பலாபலன்கள், சாதக பாதகங்களை அனுபவித்தறிய இன்னும் அதிக காலம் காத்திருக்க வேண்டியதில்லை.

## தோழர் றொபேட் பிறந்த ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

சின், மத்தியஸ்தத்துடன் இலங்கை அரச படைகளுடன் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில், புலிகளின் தலைவர் பிரபாகரன் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணாக புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பல நூற்றுக்கணக்கான படுகொலைகளில் தோழர் றொபேட்டின் படுகொலையும் ஒன்றாகும். வேம்படி மகளிர் கல்லூரியின் வகுப்பறையில் ஆயுதங்களுடன் மறைந்திருந்தே புலிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர்.

தோழர் றொபேட்டின் தந்தையார் தம்பிராசா, ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் 1989 இறுதியில் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டவர்களில் ஒருவர்.

1990 முற்பகுதியில் வடக்கு கிழக்கிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள், ஆதரவாளர்களின் குடும்பங்கள் பல புலிகளால் பலவந்தமாக இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டன. இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களில் தோழர் றொபேட்டின் தாயார் இரத்தினம்மாவும் அடங்கியிருந்தார்.

இதனால் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளான அவர் தனது மகனின் படுகொலைக்குப்பின் மிகவும் மனம் உடைந்த நிலையில், நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார்.

தோழர் றொபேட் 80 களின் ஆரம்பத்தில் 1983 இனக்கலவரத்திற்கு முன்னதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் இல் இணைந்து அதன் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் காத்திரமான பங்களிப்பை வழங்கியவர்.

இயற்கை அனர்த்தங்களாலும், இன வன்முறைகளாலும், பாரபட்சங்களாலும், ஆயுதப்படைகளின் அக்கிரமங்கள், சமூக அடக்குமுறைகளாலும் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கவும், அவர்களின் விடிவிற்கும் உண்மையாய் உழைத்தார்.

மட்டக்களப்பில் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் ஆயுதப்படைகளால் சுடப்பட்டு, வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு நிர்க்கதியான மக்களின் மறுவாழ்வுப் பணிகளிலும், புத்தூர், சிறுப்பிட்டி கிராம மக்களின் கூலி உயர்வு மற்றும் சமூக அநீதிகளுக்கு எதிரான போராட்டங்களிலும் அவர் வழங்கிய பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கவை.

மக்கள் மத்தியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் கருத்துக்களை பிரச்சாரப்படுத்தியதிலும், இயக்கத்திற்காக இளைஞர்களை அணி திரட்டியதிலும் அவர்கள் அரசியல் தெளிவு பெறுவதற்கும், அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியளிப்பதற்கும் அவர் ஆற்றிய பங்கு மகத்தானதாகும்.

இயக்க வேலையின் நிமித்தம் யாழ்ப்பாணம், குருநகர் பகுதிக்குச் சென்றிருந்த

யப்பட்டார். இதன்போது அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த குருநகரை சொந்த இடமாகக் கொண்ட தோழர் குமார் (போல்டன் உதயகுமார்) இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தோழர் றொபேட் பலத்த சித்திரவதைகளுக்குப் பின் வெலிக்கடை சிறையில் இதர இயக்கங்களிலுமிருந்து கைதான பலருடன் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அங்கு, அவர் இயக்க வேற்றுமைகளுக்கு அப்பால் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைவரதும் நலன்களுக்காகவும், விடுதலைக்காகவும் ஏனையோருடன் ஒன்றிணைந்தும், தனித்தும் பாடுபட்டார். சிறையின் உள்ளே அவரோடு சிறைவாழ்க்கையை அனுபவித்த அனேகர் இன்றும் இவற்றை நினைவு கூருவர்.

1987 யூன் மாதம் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. தமிழ் அரசியல் கைதிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற இவ் ஒப்பந்தத்தின் சரத்திற்கமைய விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் தோழர் றொபேட் ஒருவராவார்.

ஆயுதப்படைகளின் முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் பல்வேறு சித்திரவதைகளுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகிய போதும் தான் சார்ந்த இயக்கத்தை, இயக்க தோழர்களை பாதுகாத்து, பலம் சேர்க்க முனைந்த தோழர் றொபேட்டும், அவரைப்போன்றே இதர இயக்கங்களை சேர்ந்தவர்களும் சிறைகளிலிருந்து விடுதலையானபோது ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட்,ஆகிய இயக்கங்கள் செயற்படுவதற்கு புலிகள் தடைவிதித்து அந்த இயக்கங்களை சேர்ந்த பலரை படுகொலை செய்திருந்தனர். இலங்கை அரசாங்கம் பொது மன்னிப்பு வழங்கி இவர்களை விடுவித்திருந்த போதும் புலிகளால் தேடப்படுபவர்களாக, தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாதவர்களாக, உயிர் அச்சுறுத்தலை எதிர்நோக்குபவர்களாக இக்கட்டான நிலைக்கு உள்ளாகியிருந்தனர். இதனால் பலர் விரக்தியுற்று அரசியலை விட்டே ஒதுங்கிக் கொண்டார்கள், பலர் வெளிநாடுகளுக்கு சென்றார்கள்.

தோழர் றொபேட் தான் சார்ந்த இயக்கத்தின் உள்ளேயும் நெருக்கடியை எதிர்கொண்டார். அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் இராணுவப் பிரிவுத் தலைவராயிருந்த தோழர் தேவா (டக்ளஸ் தேவானந்தா) ஈ.பி.ஆர்.எல்.எவ் இலிருந்து வெளியேற்றப்பட்டு ஒரு தனிக் குழுவாக செயற்படும் துர்ப்பாக்கியம் நிகழ்ந்திருந்தது.

இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தோழர் றொபேட், அரசியல் நவடிக்கைகளை தொடர வேண்டுமென்ற தனது முடிவிலிருந்து பின்வாங்கவில்லை.

படிப்பகம்

தோழர் தேவா, மீண்டும் ஈபிஆர்எல்எவ்

டிருந்தார். அதற்காக தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், கருத்துவேறுபாடு கொண்டிருந்த இரண்டு தரப்புக்கும் அதில் ஆர்வம் இருக்கவில்லை. காலத்தை இழுத்தடித்தபடி இரண்டு தரப்புமே தத்தமது திட்டங்கள், தீர்மானங்களின் படி தமது நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டிருந்தமையால் அவரது முயற்சி கைகூடவில்லை. பரிகசிப்பிற்குள்ளானது.

தனது முயற்சி வெற்றிபெறாத நிலையில் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் முடிவடைந்த பின்னர் தோழர் றொபேட் 1989 ஜனவரியில் சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வந்து மீண்டும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் அரசியல் இராணுவ நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொண்டார். இதன்போது தென்மராட்சி உசன் பிரதேசத்தில் புலிகளுடனான மோதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்தார். இதுவே அவர் அதிகநாள் ஓய்வெடுத்த கடைசி சந்தர்ப்பமாகும். ஏனெனில், இரவு, ஓய்வு நாள், மழை என்று எந்த நாளிலும், எந்த நேரத்திலும் அவர் கட்சிப் பணிக்கென அழைக்கப்பட்டால் பின்னடிப்பதில்லை.

1989 ஜனவரி தொடக்கம் 1990 முற்பகுதியில் இந்திய இராணுவம் வெளியேறியது வரை குறுகிய காலமே செயற்பட முடிந்த போதும் அக்காலப்பகுதியில் அவர் ஆற்றிய பணிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு களங்கம் ஏற்படுத்துவதாய் ஒருபோதும் அமைந்திருக்கவில்லை. மக்கள் மத்தியில் பணியாற்றுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவேயிருந்தன.

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் இந்தியாவிற்கு இடம்பெயர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளான ஈபிஆர்எல்எவ் அங்கத்தவர்கள், ஆதரவாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், தேவைகளை நிறைவு செய்வும் தோழர் றொபேட், அல்லும் பகலும், அயராது பாடுபட்டார். அவர்களின் நன்மை தீமைகளில் உடனிருந்தார்.

1993 ஆம் ஆண்டு நடைபெற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் இரண்டாவது காங்கிரசில் தோழர் றொபேட் மத்திய குழு உறுப்பினராகவும், அரசியல் பீட உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டார். அனைத்து பிரதேசங்களையும் சேர்ந்த தோழர்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற ஒருவராக அவர் விளங்கினார்.

1994 இல், மீண்டும் ஈபிஆர்எல்எவ் இன் அரசியல் நடவடிக்கைகளை வடக்கு கிழக்கில் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் வந்தபோது தோழர் றொபேட் அந்தப் பணிகளுக்கு தலைமை ஏற்றுச் செயற்பட்டார். 1997 இல் யாழ் நகரில் ஈபிஆர்எல்எவ் இன் அலுவலகம் மீண்டும் செயற்படத் தொடங்கியது. 1998 இல் நடைபெற்ற உள்ளூராட்சிசபை தேர்தலில் யாழ் மாநகர சபைக்கு போட்டியிட்ட தோழர் றொபேட் வெற்றிபெறவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இருவரில் ஒருவருக்கு பதிலாக, புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்

தமிழ் அரசியல் கட்சிகளுடன் ஐக்கியப்பட்டு யுத்தத்தால் சிதைந்துகிடந்த யாழ் மாநகரப்பகுதிகளை புனரமைக்கும் பணியில் கைகோர்த்து நின்றார். தமிழ் அரசியல் கட்சிகளின் ஜனநாயக நடைமுறைகளுக்கு முன்மாதிரியாயிருந்தார். யாழ் மாநாகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரதும் அபிமானத்தைப் பெற்றிருந்தார்.

தனது உடலாலும், உள்ளத்தாலும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்காகவே வாழ்ந்த தோழர் றொபேட் எப்போதும் கட்சியின் வளர்ச்சி, தோழர்களினதும், மக்களினதும் நலன் என்பவற்றையே முதன்மைப்படுத்தி செயற்பட்டவர். எந்தக் குற்றமும் இழைக்காத போதும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக குரல்கொடுத்தார், நியாயம் கேட்டார் என்பதற்காக 2000 ஆம் ஆண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ் இலிருந்து வெளியேற்றப்பட்டார். இதன் மூலம் ஈ.பி.ஆர்.எல்.எவ் தன் வரலாற்றை கறைப்படுத்திக்கொண்டது என்றால் மிகையில்லை.

ஒருபுறம் சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாத புலிகளின் கொலை அச்சுறுத்தல், மறுபுறம் அவர்கள் கட்டிவளர்த்த அரசியல் இயக்கம் புறம்தள்ளிவிட்ட அவலம் இவ்வாறு நிர்க்கதியான நிலையில் விடப்பட்ட தோழர்களின் தனிப்பட்ட வாழ்க்கை, அரசியல் எதிர்காலம் என்பன குறித்து பொறுப்புணர்வோடு சிந்தித்தார். ஒரு மத்திய குழு உறுப்பினரான தனது தலைமையை ஏற்றுச் செயற்பட்ட அனைவரதும் நம்பிக்கைகள் வீண்போகாதவாறு தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார்.

எத்தகைய நெருக்கடிகளையும் மனக் கிலேசமடையாது எதிர்கொள்ளும் மனத் திண்மையும், செயற்திறனும் வாய்ந்த தோழர் றொபேட் முகங்கொடுத்த எந்த நெருக்கடியும் அவரது அரசியல் பயணத்தை தடுத்துவிட முடியவில்லை. தமிழினத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலையே அவரது குறிக்கோள். இன ரீதியான பாரபட்சங்களுக்கெதிராகப் போராடிய அவர் இனங்களிடையே ஐக்கியத்தை வலியுறுத்தியவர். சமூக அநீதிகளுக்கு எதிரானவராயிருந்தார். ஏற்றத்தாழ்வில்லாத சமூகம் அவரது இலட்சியமாயிருந்தது. பெண்களின் உரிமைகள் தொடர்பில் தெளிவான பார்வையும் பெண் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான நிலைப்பாடும் அவரிடம் எப்போதும் இருந்தது. மூட நம்பிக்கைகளுக்கு அவர் ஆட்படவில்லை.

சுமார் 21 ஆண்டுகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் கொள்கை வழி நின்று உறுதியாக உழைத்த தோழர் றொபேட் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும், ஜனநாயக உரிமைகளை மீட்பதற்காகவும் போராடினார். இந்த மகத்தான பணியில், தனது 46 வது வயதில் தன் உயிரையும் அர்ப்பணித்தார். தனிப்பட்ட வாழ்விலும், பொது வாழ்விலும் பின்பற்றத் தக்க உதாரண புருஷர் அவர்.

அவரது உத்வேகத்தாலும், உழைப்பாலும் உருப்பெற்ற பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்

www.padippakam.com





## வடக்கில் கைது செய்யப்படுபவர்கள் முன்னாள் புலிகள்

மேஜர் ஜெனரல் மஹிந்த ஹதுருசிங்க
சிலோன் ருடே இணைத்தளத்திற்கு தெரிவிப்பு

யுத்தத்தின் முடிவில் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் பாதுகாப்பு படைகளிடம் சரணடைந்தனர். இவர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு மீண்டும் சொந்த வாழ்க்கைக்கு திரும்ப அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பலர் படையினருக்கு உண்மையை மறைத்து மக்களோடு மக்களாக வீடுகளுக்குச் சென்றுள்ளனர். இவ்வாறு புனர்வாழ்வு முகாம்களுக்குச் செல்லாது நழுவியவர்களே வடக்கில் கைது செய்யப்படுவதாக யாழ். இரா ணுவ தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹதுருசிங்க தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் 40 பேர் பயங்கரவாத தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்களை இராணுவ புலனாய்வு பிரிவினரும் பயங்கரவாத தடுப்பு பொலிசாரும் கண்காணித்து வருவதாகவும் மேஜர் ஜெனரல் ஹதுருசிங்க சிலோன் ருடே இணையத்தளத்திற்குத் தெரிவித்துள்ளார்.

## மாகாணசபை முறை திணிப்புமல்ல வெள்ளை யானையுமல்ல

**லங்கா சமசமாஜ கட்சி தலைவர், அமைச்சர் திஸ்ஸ விதாரன செவ்வி**

மாகாணசபைகள் முறையானது இந்தியாவால் திணிக்கப்பட்டது என்ற கருத்து முற்றிலும் தவறானதாகும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், அமைச்சருமான திஸ்ஸ விதாரண டெயிலி மிரருக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.



எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா சமஷ்டி அமைப்பில் பிராந்திய சபைகளை உருவாக்குவதை ஆதரித்திருந்தார். அதிகாரப் பரவலாக்கலுக்கான அலகுகளை உருவாக்குவது பற்றிய பிரச்சினை விவாதிக்கப்பட்டு வந்துள்ளது. சிலர் மாகாணங்களை ஒரு அலகாக ஏற்றுக்கொள்ளலாம் என்று கருதினார்கள். வேறு சிலர் மாவட்டங்களை விரும்பினார்கள் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட போது மாகாணசபைகள் ஓர் அலகாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மாகாணசபை முறையானது வெள்ளை யானைக்கு ஒப்பானது பொது நிதிகள் வீணாக வழிவகுத்துள்ளது எனவும் கூறப்படுகிறது. உண்மை என்னவெனில் அரசின் முழு செலவினத்தில் 7.5 வீதம் தான் மாகாணசபைகள் மூலம் செலவிடப்படுகின்றது. அதிலும் பெருந்தொகை பாடசாலைகள், மருத்துவ மனைகள் போன்றவற்றின் சம்பளம் மற்றும் செலவுகளுக்காகவே பயன்படுத்தப்படுகின்றது. மாகாண சபைகள் இல்லாது போனாலும் இவை அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவுகளே. இந் நிதியில் ஒரு வீதமே அரசியல்வாதிகளின் செலவினங்களுக்கு போகின்றது

மக்கள் நலச் சேவைகளான முக்கிய, அதிக செலவை ஏற்படுத்தும் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகளுக்கான செலவுகள் மாகாண சபைகளுக்கு நேரடியாக வரும் வருமானங்களிலிருந்தே செய்யப்படுகின்றன.

மாகாணசபைகளுக்கு மாற்றீடாக மாவட்ட சபைகளை நிறுவுவது பற்றி ஆலோசனை தெரிவிக்கப்படுகின்றது இவை பொருளாதார ரீதியில் பயனளிக்கவல்லதல்ல என்பதுடன் 25 மாவட்ட சபைகள் இருக்குமென்பதால் செலவுகளை அதிகரிக்கச் செய்வதாக அமையும் எனவும் அமைச்சர் திஸ்ஸ விதாரன தெரிவித்துள்ளார்.

## ஒற்றையாட்சிக்குள் ஒருபோதும் தீர்வில்லை

தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தலைமையில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் அருகில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் 27.12.2012 அன்று நடைபெற்றது.

மேற்படி பொதுச்சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலை தூக்குவதாக அரசு கூறுவதில் எள்ளவும் உண்மையில்லை. இவ்வாறு தவறான கருத்தை உருவாக்கி அதன் மூலம் திரும்பவும் இருண்ட வாழ்வுக்குள் தமிழர்களை தள்ளுவதை அரசு நிறுத்த வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு உளவள ஆலோசனை வழங்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. அரசு இராணுவத்தை தொடர்ந்து வைத்திருக்கவும், அதனை நியாயப்படுத்தவும், வாய்ப்பளிக்கும் செயற்பாடுகளில் மாணவர்கள் இறங்காதவாறு அவர்களுடன் தொடர்புடையவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் தான்தோன்றித்தனமாக முடிவுகளை எடுத்து வருகின்றனர். இதனை அவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கூட்டமைப்பு வலுவடைய வேண்டுமெனில் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் தாம் எடுக்கும் முடிவுகள் தங்கள் கட்சியை சார்ந்ததா தமிழ் தேசிய கூட்டமைப்பின் முடிவா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

சிறுபான்மை இனத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை, வன்முறையின்றி பேச்சுவார்த்தை மூலமும், இணக்கப்பாட்டுடனும், சமாதானமாகவும் தீர்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டும்.

இலங்கை வாழ் அனைத்து மக்களும் சமாதானத்துடனும், ஜனநாயக மனிதாபிமான அடிப்படையில் உரிமைகளை அநுபவிக்க அரசு உத்தரவாதமளிக்க வேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் ஒருபோதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அதிகாரப் பகிர்வின் மூலமே நாட்டில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியும். இது தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுதியான நிலைப்பாடாகும்.

## அதிகாரப்பகிர்வு...

1 ம் பக்கத் தொடர்ச்சி

உண்மைகளை மறைத்து, திரித்து போதையேற்றும் வாணிபத்தனமான ஊடகத்துறையும் தோற்கடிக்கப்பட வேண்டும்.

அந்தவகையில் உண்மைகளுக்காக கண்ணோட்டம் தன்னால் இயன்றவரை பணியாற்றும்.

இராணுவமயமாக்கல், திட்டமிட்ட குடியேற்றங்கள் எந்தளவு தூரம் தமிழர்கள் என்ற ரீதியில் பிரச்சனை ஆனதோ, அதே அளவிற்கு வறியவர்களுக்கும், தீண்டாமையின் ஆக்கிரமிப்பில் உழலப்வர்களுக்குமான நிலப்பிரச்சனையும் எம்மைப்பொறுத்தவரை முக்கியமானது.

யாழின் சனத்தொகை 25 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட 50 வீதமாக குறைந்திருந்தும் காணிப்பிரச்சனை பூதாகரமானது.

வன்னியிலும் காணிகளுக்கு ஆவணமில்லாமல், காணி இல்லாமல் இருப்பவர்களின் பிரச்சனை பாரியது. ஏழைகளின் நிலங்களை இராணுவத் தேவைகளுக்காக கையப்படுத்துவது எந்த தார்மீக நெறி முறைகளுக்கும் ஒவ்வாதது.

இராணுவம் மக்களின் நிலங்களை விட்டு வெளியேற வேண்டும். யுத்தம் முடிவடைந்து 3 ஆண்டுகள் ஆகிய பின் இதற்கு எந்த சப்பை கட்டும் கட்டமுடியாது.

ஆனால், நிலமில்லாதவர்களுக்கு நிலம் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

அதிகாரப்பரவலாக்கல் மூலம் உருவாகும் அரச கட்டமைப்பே இதனை மேற்கொள்ள வேண்டும்

அதற்குரிய அதிகாரங்கள் பிராந்தியமட்டத்தில் இருக்கவேண்டும்.

நிலம் ஒரு முக்கியமான பிரச்சனை, புலம் பெயர்ந்தவர்களும் இதுபற்றி சிந்திக்க வேண்டும்.

ஏனெனில், இது பாரிய மனிதாபிமானப் பிரச்சனை

ஏர் சக்தி வளங்களை சூழலுக்கு பாதகமில்லாமல் வளர்த்தெடுத்தல்

மீன்பிடி, விவசாயம், சிறு கைத்தொழில்கள், நகர் உருவாக்கம், சுற்றாடல் உள்ளிட்டவியங்களும் பிராதிய மட்ட அரசாங்கத்திடம் வழங்கப்பட வேண்டும்.

பிராந்தியமட்ட அதிகாரம் கல்வி- நிலையங்களுள் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதாக அமையவேண்டும். கதாநாயக-நாயகி பாடசாலைகள் மறைய வேண்டும்

சமூக ஏற்றத்தாழ்வின் கட்டுமானமாக இவை இருக்கின்றன.

பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகள் களையப்படவேண்டும்.

கிழக்கில் ஒரு மாகாண சபை செயற்பட்டாலும் உரிய அதிகாரங்கள் பகிரப்படவில்லை.

இதனை கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன், தோழர் துரைரட்ணம் உள்ளிட்ட அங்கத்தவர்கள் வரை வலியுறுத்தி வந்துள்ளார்கள்.

தற்போதைய மாகாண சபையும் இதே பிரச்சனைகளை எதிர்நோக்குகிறது.

13 வதின் கீழான அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைச் சாத்தியமாக்கப்படல் வேண்டும்.

இன- மனித உரிமைப் பிரச்சனைகள் தொடர்பான சர்வதேச அக்கறைகள் உதாசீனப்படுத்த முடியாதவை.

முன்னர் எப்போதையும் விட இலங்கை இந்து சமுத்திர பிராந்திய சர்வதேச சிரத்தைகளை கவனத்திலெடுத்தாக வேண்டும்.

ஒருவாறு வடக்கு மாகாண சபைத் தேர்தலை இவ்வருடம் நடத்த ஒப்புக கொள்ளப்பட்டது வரவேற்க வேண்டியதே.

ஆனால் 13 வதின் கீழான அதிகாரங்கள் சரியான முறையில் பகிர்தளிக்கப்பட வேண்டும். பகிரப்பட்ட அதிகாரங்களை மத்திக்கு எடுத்துக்கொள்வதற்கான நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கான புதிய ஏற்பாடுகளும் அரசியலமைப்பில் உள்ளடங்க வேண்டியிருக்கிறது.

## கண்டிக்கிறோம்...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

சொல்லிக்கொள்ளவையும் சார்பு நிலையில் நின்று செய்திகளுக்கு முக்கியத்துவமளிப்பதும், திரித்துக் கூறுவதும், இருட்டடிப்புச் செய்வதும் நிகழாமலில்லை.

பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். மக்களின் தகவல் அறியும் உரிமையும் பேணப்பட வேண்டும்.

**சம உரிமை இயக்கத்தின் கையெழுத்து போராட்டம் கழிவுகளை வீசி குழப்பப்பட்டதை கண்டிக்கிறோம்**

யாழ் நகரில் அமைதியான முறையில் கையெடுத்து இயக்கம் ஒன்றை நடாத்திக் கொண்டிருந்த சம உரிமை இயக்கத்தினர் மீது கழிவு எண்ணை வீசப்பட்ட சம்பவத்தையும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டிக்கிறது.

பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்க வலியுறுத்தியும், கடத்தல் மற்றும் காணாமல் போகும் சம்பவங்களை நிறுத்தக் கோரியும், வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரியும் சம உரிமை இயக்கத்தினர் 15.01.2013 அன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் அமைதியான முறையில் கையெழுத்திடும் போராட்டத்தை நடாத்திக்கொண்டிருந்த போது கழிவு எண்ணை வீசி தாக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளான கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடும் உரிமை என்பவற்றை நிராகரிப்பதாகும்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும்.

"நிலையானதும், நம்பகரமானதுமான எந்த நல்லிணக்க செயல்முறைகளுக்கும் வழிபாட்டுச் சுதந்திரம் ஒன்று கூடும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் அவசியமாகும்."

"கட்டுப்பாடுகளின்றி விழாக்களையும், கூட்டங்களையும் ஏற்பாடு செய்வதற்கு சுதந்திரம் இருக்க வேண்டும்."

"எந்த ஒரு அரச நிறுவனமும் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் இவற்றை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்துகிறது."

"பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள், கொலைகள், ஊடக நிறுவனங்களை அழித்தல் போன்ற சம்பவங்களையிட்டு புலன் விசாரணை செய்து குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். இந் நிலைமை தொடர்வதையிட்டு ஆணைக்குழு ஆழ்ந்த கவலை அடைகின்றது. ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே உதயன் பத்திரிகை ஆசிரியர் மீதான மோசமான தாக்குதலினால் ஆணைக்குழு அதிர்ச்சியடைவதோடு அதனை வன்மையாகக் கண்டிக்கிறது. இது பற்றி புலன் விசாரணை செய்து குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதன் மூலமே நல்லிணக்கத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் நிலைநாட்ட முடியும்."

நல்லிணக்க ஆணைக்குழுவின் மேற்படி பரிந்துரைகள் அடங்கியுள்ள அறிக்கை 17.11.2011 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் இந்த பரிந்துரைகளை விடவும் மேலதிகமாக நாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

வன்முறையும், எதிர் வன்முறையும் நாட்டையும், தமிழ் சமூகத்தையும் நாசப்படுத்

கல்கள் முரண்பாடுகளும் இதனை உணர்த்துகின்றன.

அனைத்துக் கட்சி பாராளுமன்றக் குழு செயற்படுவதற்கான சூழல் சாத்தியமானால் அதிகாரப்பரவலாக்கல், இன சமூகங்களிடையே நல்லுறவு இவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அதி தீவிர இனவாதசக்திகளின் குரல் வலுவடைய அனுமதிக்கக் கூடாது. இது ஜனநாயகம், சமாதானம், சகோதரத்துவத்தில் நம்பிக்கை உள்ள தலைவர்களின், மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பும் கடமையுமாகும்.

www.padippakam.com





# இரண்டும் ஒன்றல்ல

## மனோ கணேசனிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) நடத்திய போராட்டத்திற்கும் புலிகள் நடத்திய போராட்டத்திற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி நாட்டைப் பிரிக்கப் போராட்டம் நடத்தவில்லை. புலிகள் நாட்டைப் பிரிக்கப் போராட்டம் நடத்தினார்கள். அத்துடன் ஜே.வி.பி இன்று தடை செய்யப்பட்டுள்ள அமைப்பு அல்ல எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

யுத்தம் முடிந்து சில ஆண்டுகளே ஆன நிலையில் புலிகள் இன்று தடை செய்யப்பட்ட அமைப்பு. புலிகளை நினைவு கூருவதை நாம் அனுமதிக்க முடியாது. எனவே புலிகள் நடத்திய போராட்டத்திற்கும், ஜே.வி.பி யினர் நடத்திய போராட்டத்திற்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டை பல்கலைக் கழக மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள் என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனின் பிறந்த நாளையொட்டி அவருக்கு தொலைபேசியில் வாழ்த்துக் கூறியவேளை ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக் கழக மாணவர்களை விடுதலை செய்யுங்கள். இந்தச் சம்பவங்கள், மீண்டும் கடந்த காலங்களுக்கு நாட்டை அழைத்துச் செல்வதை அனுமதிக்காதீர்கள். நாட்டின் முதற் குடிமகன் என்ற அடிப்படையில் பல்கலைக் கழக மாணவர் விவகாரத்தில் நேரடித் தலையீடு செய்யுங்கள் என மனோ கணேசன் கேட்டுக்கொண்டதற்குப் பதிலளித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியதாக மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

**பிரதம நீதி** – 1 ம் பக்கத் தொடர்ச்சி

1 ம் பக்கத் தொடர்ச்சி

பாராளுமன்றத்தில் குற்றப்பிரேரணை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைவரும் அமைச்சருமான டியு குணசேகரா பிரதம நீதியரசர் நெவில் சமரகோனுக்கு எதிரான குற்றப் பிரேரணையை கையாளவென ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் பணிப்புரைக்கமைய நிலையியல் சட்டம் 78 (ஏ) அவசர அவசரமாக 3 நாளில் தயாரிக்கப்பட்டதாகும்.

முறையான சட்ட செயன்முறைகள் விதிக்கப்படாதவிடத்து குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பு விசாரணை பற்றி திருப்தியடையாது என்று கூறிய அமைச்சர், தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்யாது பதில் அறிக்கை ஒன்றை தயாரித்துச் சமர்பித்திருக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டினார்.

குற்றப்பிரேரணை அறிக்கை மீதான வாக்கெடுப்பில் வாக்களிக்கமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் டியு குணசேகரா, லங்கா சமசமாஜ கட்சி தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரன, அமைச்சர் சந்திரசிறி கஜதீர, முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி, ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜயசிங்க ஆகியோர் பிரதம நீதியரசருக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கவில்லை.

# சிந்தித்துச் செயற்படுவோம்

## யாழ் மாநகர சபை உறுப்பினர் றெமீடியஸ்



1970 களின் இறுதியிலும் 1980 களின் ஆரம்பத்திலும் தமிழ் அரசியல் வாதிகளின் உணர்ச்சிகரமான பேச்சுக்கள் யாழ் பல்கலைக் கழகத்தில் போராட்டங்களுக்கு காரணமாயிருந்ததுடன் பல ஆயிரக் கணக்கான இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவும் வழி வகுத்தது. ஆனால், இந்தத் தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டார்கள். ஏழை, எளிய மக்களின் பிள்ளைகளே ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தார்கள்.

இதேநிலை, இப்போது மீண்டும் உருவாகியுள்ளது. கூட்டமைப்பு அரசியல்வாதிகள் தங்கள் உணர்ச்சிகரமான பேச்சுக்களால் பல்கலைக்கழக மாணவர்களை தூண்டி, வன்முறையை தோற்றுவித்து இளைஞர்களை பலிகொடுக்க முயற்சிக்கிறார்கள்.

இராணுவம் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி வருகின்றவேளையில் இது போன்ற நடவடிக்கைகள் இராணுவம் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலிருக்க வேண்டும் என்ற எண்ணத்தை அரசுக்கு ஏற்படுத்துவதாய் அமையும்.

இவ்வாறு வன்முறைகளை தூண்டி இவற்றுக்கு ஆதரவாக செயற்பட்டோமேயானால் எமது சமூகம் சீர்குலைய நாங்களே காரணமாவோம். அரசு அவசரகாலச் சட்டத்தை மீண்டும் கொண்டுவர நாங்களாகவே வழிவகுத்துக் கொடுத்தவர்களாவோம்.

மாவீரர் தினம் கொண்டாடப்படக் கூடாது என்று நான் கூறவில்லை. கடந்த கால அனுபவங்களை கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும். தேவையற்ற விதத்தில் உணர்ச்சியைத் தூண்டி மக்களது இயல்பான நிம்மதியான வாழ்வுக்கு இடையூறு விளைவிக்காதவாறு செயற்பட வேண்டும்.

மாவீரர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று கோரிக்கை விட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தனது வீட்டிலோ அல்லது காரியாலயத்திலோ ஒரு தீபத்தை ஏற்றினாரா? என்பதை சிந்திக்க வேண்டும்.

இந்த அரசியல்வாதிகள் கடந்த காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் இருப்பவர்களுக்கு உதவியிருக்கிறார்களா? அல்லது ஒரு ஆயிரம் ரூபாவையேனும் செலவிட்டு ஒரு சட்டத்தரணியை நியமித்து அவர்களை விடுதலை செய்ய உதவியிருக்கிறார்களா?

எனவே, இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆதரவாக கொண்டுவரும் எந்த ஒரு தீர்மானத்தையும் நான் தனிப்பட்ட முறையில் ஆதரிக்க மாட்டேன் என சட்டத்தரணியும், யாழ் மாநகரசபையின் உறுப்பினருமான முடியப்பு ரெமீடியஸ் தெரிவித்துள்ளார்.

**கண்ணோட்டம் இதழ் 64 இல் (10 நவம்பர் 2012) அபிமன்யு பதில்கள் பகுதியில் பிரசுரமான கேள்விகள் வாசிக்கமுடியாதவாறு எழுத்துருக்கள் தவறாக அச்சாகியிருந்தன. குறித்த 2 கேள்விகளும் இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம். அபிமன்யு பதில்கள் பகுதிக்கான உங்களது கேள்விகளை ஆசிரியர், கண்ணோட்டம், இல: 294, கண்டி வீதி, புங்கம்குளம் சந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்**

# அபிமன்யு பதில்கள்

*இ.இராசலிங்கம் — சாவகச்சேரி*

**புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் யுத்த விதிகளுக்கு விரோதமாகச் செயற்பட்டோரின் மீது விசாரணைகள் நடாத்தி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று சிலரால் மேற்கொள் எப்படும் முயற்சிகள் பற்றி என்ன நினைக்கிறீகள்?**

*தி.சுந்தரலிங்கம் — உடுவில்*

**இலங்கையில் தமிழ் மக்கள் இன்னுமொரு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து தங்களின் உரிமைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டா?**

இந்த உண்மையை எப்பொழுது தமிழ் இனம் உணருகிறதோ, அப்பொழுதுதான் அந்த இனம் சுதாகரித்துக் கொண்டு, அவை தரும் பாடங்களையும் படிப்பினைகளையும் மனதில் கொண்டு, பாதையைச் செப்பனிட்டு, ஆக்கபூர்வமான பாதையில் அடிவைத்துப் பயணத்தை மேற்கொள்ள முடியும். இல்லாவிட்டால், மேன்மேலும் அழிவுகள் தவிர்க்க முடியாதது என்பதைத் தமிழ் இனம் உணர வேண்டும்.



*ச.பரமசிவம் — சாவகச்சேரி*

**கேள்வி: புலிகளின் தலைவர் பிரபாகரன் விட்டுச் சென்ற சொத்து என்ன?**

ஒருவர் தன் வாழ்நாளில் தனது ஒட்டுமொத்தச் செயல்களின் விளைவாக விட்டுச் சென்ற சொத்து என்ன என்பதை மதிப்படும் அளவுகோலானது, அவரை நம்பியிருந்தோருக்கு, அவரை ஒரு வழிகாட்டியாகக் கொண்டிருந்தோருக்கு எவ்வெவற்றை அவர் ஆக்கிவைத்தார் என்பதே.

இந்த அளவுகோலின் அடிப்படையில், பிரபாகரன் தனது ஒட்டுமொத்தச் செயல்களின் விளைவாக விட்டுச் சென்றவைகள் அழிவுகளும் அக்கிரமங்களுமே. அவருடைய பாதை தமிழ் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் என்ற அனைத்து மட்டங்களிலும் அளப்பரிய சேதங்களையும், பின்னடைவுகளையுமே விளைவித்திருக்கின்றன. பொய்மை உணர்ச்சி மூடர்களாக இல்லாமல், அறிவுபூர்

*ப.பிரசாந்தன் — யாழ்ப்பாணம்*

**கேள்வி: தேசியவாதியின் தன்மை என்ன ?**

பதில்: தேசியவாதிகளின் தன்மைகளில் ஒன்று, ஜோர்ச் ஒவெல் (George Orwell) என்ற எழுத்தாளர் கூறியது:

"தேசியவாதி தனது தரப்பினரால் செய்யப்படும் அக்கிரமங்களை கண்டனம் செய்ய மறுப்பதோடு மட்டுமன்றி, அவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டேயிராத அளவுக்கு இருக்கும் விசேட தன்மையையும் தன்னகத்தே கொண்டவனாக இருபபான்."

அவர் இப்படிக் குறிப்பிட்டது, போலித் தேசியவாதிகளை என நினைக்கிறேன். அப்படியானோர் பலர் இலங்கையில் சிங்கள, தமிழ் இனங்கள் இரண்டிலுமே இருக்கிறார்கள்.

"வாழு, வாழ விடு" என்ற மனப்பாங்கு எப்பொழுது ஒருவரிடம் அற்றுப் போகிறதோ அப்பொழுது அவர் ஒரு தேசியவாதியாக இருப்பதற்கான யோக்கியதை அற்றுப்போகிறது.

*ச.பாலகிருஷ்ணன் — பண்டத்தரிப்பு*

**கேள்வி: நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற பெயரில் வெளிநாடுகளில் புலிகளின் முன்னாள் சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன் தலைமையில் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பின் நடவடிக்கைகள் எந்த அளவில் இருக்கின்றன?**



பதில்: நான் சொல்லவில்லை, புலிகள் சார்பு பத்திரிகையாக வெளிநாடுகளில் வெளியிடப்படும் ஒரு பத்திரிகையில் வெளி வந்த கருத்து இது:

"இதுவரை எந்தவொரு துரும்பையும் சிறீலங்கா வின் இனப்படுகொலைக்கு எதிராக நகர்த்தவோ அல்லது தமிழ் மக்களை சிங்களப் பேரினவாதத்திடம் இருந்து மீட்பதற்கு எந்தவொரு நடவடிக்கையை எடுக்கவோ முனையாது வெறும் வாய்ச்சவாடல்களையும், வெற்று அறிக்கைகளையும் வெளியிட்டுக்கொண்டு, பதவிக் கதிரைகளை ஆக்கிரமிப்பதற்காக போட்டிபோட்டுக் கொண்டிருக்கும் நாடுகடந்த தமிழீழ அரசின் தலைமையும் அதன் பிரதிநிதிகளும் தமிழ்மக்களால் வெறும் கோமாளிகளாக நோக்கப்படுகின்ற ஒரு நிலைமையை இப்போது எட்டியுள்ளனர்."

*சி.பத்மநாதன் — கிளிநொச்சி*

**கேள்வி: மகிந்த ராஜபக்சா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிக் கூறுவீகளா?**

பதில்: மகிந்த ராஜபக்சாவின் எதிர்கால நலனில் உண்மையாக அக்கறை கொண்டுள்ளோர் எவராவது திருக்குறளில் "அரசியல்" என்ற அதிகாரத்தில் வரும் 476 வது குறளை அவரின் காதுகளில் முடியுமானால் போட்டு வைக்கவும்.

> "நுனிக் கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
> உயிர்க்கு இறுதி ஆகிவிடும்"

மரத்தின் (பதவியின்) உச்சிக்கிளையில் ஏறிய ஒருவர், அவ்வளவில் அளவறிந்து நில்லாது மனவெழுச்சியினால் அதையும் கடந்து மேலும் ஏற முயன்றால், அதுவே அவரது உயிர்க்கு (பதவிக்கு) முடிவாக நேர்ந்து விடும்.

www.padippakam.com



# முன்னேற்றங்கள் 2013 இலும் நிகழட்டும்

**இனப்பிரச்சினைக்கு விரைந்து அரசியல் தீர்வு காண்பது அவசியமே, மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் சிவில் நிர்வாகங்களிலும் இருந்து இராணுவத் தலையீடுகள் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்ற விடயங்கள் பிரதானமானவையே என்றாலும் மக்களின் பொருளாதார முன்னேற்றங்கள், சமூக கலாச்சார வளர்ச்சிகள், அச்சமற்ற வாழ்க்கை மற்றும் பொதுவான மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் பேணப்படுதல் என்பனவும் மிகப்பிரதானமானவையே.**

இலங்கை அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் முடிந்து மூன்றரை வருடங்கள் முடிந்துவிட்டன. இது பலராலும் அடிக்கடி பார்க்கப்படும் ஆண்டுக்கணக்கே என்றாலும் தமிழர்கள் மத்தியில் பொதுவாக இன்னமும் அரச படைகளின் அட்டகாசம் நிற்கவில்லை, அதிகாரப் பகிர்வு இடம் பெறவில்லை, பலாலியில் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக அகதிகளான மக்கள் இன்னமும் மீளக் குடியேற அனுமதிக்கப்படவில்லை எனப்பல எதிர்பார்த்த விடயங்கள் நடைபெறவில்லை எனும் ஏக்கங்கள் பரவலாகவே உள்ளன.



வைத்தியசாலை சாவகச்சேரி

இவை தொடர்பாக ஒருபக்கம் பல அரசியல் எதிர்ப்புக்கள் கிளப்பப்படுகின்றன, பல விமர்சனங்கள் வெவ்வேறு கோணங்களில் முன்வைக்கப்படுகின்றன. அதேவேளை மறுபக்கம் அவை தொடர்பாக அவற்றை நியாயப்படுத்தும் சார்பு வியாக்கியானங்களும் விளக்கங்களும் இன்னொரு பகுதினரால் கூறப்படுகின்றன. இந்த வகையான எதிர்பார்ப்பாளர்கள் யார்? சார்பாளர்கள் யார்? இவ்விருபகுதியினரில் யார் பகுதி அதிகம் யார் பகுதி குறைவானவர்கள் என்ற எண்ணிக்கை ஆராய்ச்சியில் அர்த்தமில்லை. எனினும் அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான நல்லுறவுகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றனவா? என்றால் ஆம் என்று சொல்வது கடினமாகவே உள்ளது. அரச படைகளின் தொடர்ந்த அதிகரித்த பிரசன்னமும் அவசரகாலச் சட்டம் இல்லாது போனாலும் அரச படைகளே அனைத்துக்கும் பொறுப்பு என்பது போல அரசு அனுமதித்திருப்பதுவும் அந்த நல்லுறவுகளின் முன்னேற்றத்துக்குத் தடையாகவே உள்ளன.

அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நல்லுறவு முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற அக்கறை ஆட்சியாளருக்கு இருந்தால் அதற்குத்தக்கபடி திட்டமிட்டுச் செயற்பட வேண்டியது ஆட்சியாளர்களின் பொறுப்பே. அதை வேறு யாரும் என்ன நோக்கத்துக்காகவும் சாதித்துக் கொடுக்க முடியாது. தமிழ் மக்கள் மத்தியில் அரச எதிர்ப்பு, அமைதியின்மை, குழப்பங்கள், அரசின் கைக்கு அடக்கமான அளவில் புலி போன்ற பயங்கரவாதத்தின் மீள் தோற்றம் என்பன இருந்தாற்தான் ஆட்சியாளர்கள் சிங்கள மக்கள் மத்தியில் தங்கள் செல்வாக்கு சரியாது நிலைத்து நிற்கும் என்று கணக்குப் போட்டு செயற்பட்டால் தமிழ் மக்கள் மத்தியில் நிதானமான பகுத்தறிவான வன்முறையற்ற அரசியல் முன்னுக்கு வரவே முடியாது.

வடக்கு கிழக்கில் அரசியல் மற்றும் இராணுவ களங்கள் எப்படியுள்ளன, எப்படி இருக்கப் போகின்றன, எப்படி இருக்க வேண்டும் என்பவை ஒரு பக்கம் இருக்க 2012ம் ஆண்டின் முடிவில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார சமூக அரசியல் முன்னேற்றங்களை நாம் இங்கு சுருக்கமாக வரிசையிட்டு அடையாளம் காணுவது மனதுக்கு ஓர் நிம்மதியையும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் கொடுக்கும்.

1. வடக்கு கிழக்கின் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறை நடவடிக்கைகள் மிக அதிகரித்த வீதாசாரத்தில் வேகமாக வருடா வருடம் முன்னேறி வருகின்றன.

2. வெளிநாடுகளில் வாழும் எட்டு லட்சம் தமிழர்களில் ஒரு சில ஆயிரம் பேர்களைத் தவிர ஏனையோர் பெரும்பாலும் தமது ஒவ்வொரு விடுமுறை காலத்திலும் வடக்கு கிழக்கிலுள்ள தத்தமது வீடுகள், உறவுகள், ஊர்கள், நட்புகள், கோவில்களுக்கு விஜயம் செய்து செல்கின்றனர்.

3. கல்விச்சாலைகள் மற்றும் வைத்

4. கொழும்புக்கும் வடக்கு கிழக்கின் நகரங்களுக்கும் இடையிலான வீதிப் போக்குவரத்துகளும் வடக்கு கிழக்கின் நகரங்களுக்கு இடையிலான வீதிப் போக்குவரத்துக்களும் குறைந்த நேரத்தில் குறைந்த செலவில் மேற்கொள்ளப்பட முடியும் என்ற நிலைக்கு முன்னேறியுள்ளன.

5. வடக்கு கிழக்கின் பல பாகங்களில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பல கடல் ஓட்டங்கள் கடக்கும், ஆற்று ஓட்டங்கள் கடக்கும் பாலங்கள் நவீன தொழில் நுட்பங்களுடன் கட்டப்பட்டுள்ளன.



கடல் கடக்கும் பாலம், சங்குப்பிட்டி

6. வடக்கு கிழக்கின் கோவில்கள் மற்றும் தேவாலயங்கள் எல்லாம் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகவேகமாக அழகும் விசாலமும் கொண்டவையாக அமைக்கப்பட்டு வருகின்றன.

7. கொழும்பில் கிடைக்கும் பொருட்களெல்லாம் அதே விலையில் யாழ்ப்பாணத்திலும் கிடைக்கும் எனும் நிலைமை. அதேபோல யாழ்ப்பாணத்தின் விளைபொருட்கள் தங்குதடையின்றி இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும் வர்த்தகம் செய்யப்படக் கூடிய நிலைமை.

8. 1983 க்கு முன்னைய காலத்தோடு ஒப்பிடுகையில் இப்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் கிராமங்களில் வெளி நாடுகள் மற்றும் அரச உதவிகளின் காரணமாக நிரந்தர சீமெந்து கட்டட வீடுகளின் விகிதாசாரம் அதிகமாகவே ஆகியுள்ளன.

**– ஆச்சார்யர் –**

இவை மட்டுமல்லாது இப்போது

1. வடக்கு கிழக்கு பூராவும் ஒப்பீட்டு ரீதியில் நியாயமான முறையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை அபிவிருத்தி செய்யும் வகையில் அதிகாரத்தில் உள்ளன.

2. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிகளுக்கு அஞ்சாது தத்தமது அவசியங்களைக் கருத்திற்கொண்டு தத்தமது எண்ணப்படி கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடிய நிலையில் உள்ளனர்.

3. கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்து ஆக்கபூர்வமாக செயற்படக் கூடியவர்களாக உள்ளனர்.

4. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மாற்றுக்கட்சிக்காரர்களும் தமிழ்ப் பயங்கரவாதத்தின் அச்சமின்றி செயற்படும் நிலை உள்ளது.

ணம் உட்பட அனைத்து பகுதிகளிலும் கட்சிக் கிளைகள் அமைத்து தத்தம் அரசியல் நடவடிக்கைகளை வெளிப்படையாக மேற்கொள்ளும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறாக முன்னேற்றகரமான மாற்றங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன - தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன என்பதை மறுக்க முடியாது. நடைபெற்றுள்ள முன்னேற்றங்களெல்லாம் தங்களாற்தான் நடந்தது - நடக்கிறது என ஆட்சியாளர்களும், எந்தவித முன்னேற்றங்களும் நடைபெறவில்லை என எதிர்க்கட்சிகளும் கூறினால் அது அவர்களின் வாக்கு வங்கி அரசியற் கலாச்சாரம். ஆனால் அவ்வாறு அறிவார்ந்தோர் விடயங்களின் முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகளை "விரும்பினால் ஜடை என்பர் இல்லையென்றால் மொட்டை என்பர்" என புரிந்து கொள்ள முடியாது, புரிந்து கொள்ளக் கூடாது.

நிகழ்ந்து முடிந்துள்ள, நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஒரு புறமிருக்க இந்த வருட முடிவில் யாழ்ப்பாணம் கொழும்பு புகையிரதப்பாதை பயணத்துக்கு தயாராகிவிடும் என இந்திய அரசாங்கம் கூறி வருவது மற்றொரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அத்துடன் காங்கேசன்துறை கப்பற் துறைமுக புனர்நிர்மாணம் ஏற்கனவே பல முன்னேற்றகரமான கட்டங்களைத் தாண்டிவிட்டது. அந்தத் துறைமுகம் செயற்படும்போது சர்வதேச ஏற்றுமதி இறக்குமதி யாழ்ப்பாணத்திலும் இடம்பெறும் நிலை ஏற்படும். இது பல்லாயிரக் கணக்கான வேலை வாய்ப்புக்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் தோற்றுவிக்கும் என்பதோடு வடக்கில் மேலும் பல பொருட்கள் மலிவாகக் கிடைக்கும் நிலை ஏற்படும்.



மீளக்குடியமர்ந்த மக்களின் தற்காலிக வீடு, மாதகல் மேற்கு

அதேபோல, தலைமன்னார் வரையிலான ரயில்பாதையும் இவ்வாண்டு முடிவடைவதற்குள் தயாராகிவிடுமென அறிவிக்கப்படுகின்றது. அதனால் இராமேஸ்வரம் தலைமன்னார் இடையிலான கடல்வழி போக்குவரத்துகளும் அதிகரிக்கும். ஏற்கனவே மன்னாரில் பெற்றோலிய மற்றும் எரிவாயு உற்பத்திகளுக்கான வேலைத் திட்டங்கள் முன்னேற்றமடைந்து வருகின்றன. இவையெல்லாம் சேர்ந்து தலைமன்னார் பகுதிகளில் ஓர் அதிசயத்தை நிகழ்த்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் அதற்கு தமிழர்களிடையே உள்ள பொருளாதார முதலீட்டாளர்களும் சமூகத் தலைவர்களும் தம்மைத் தயாராக வைத்திருக்கிறார்களா என்பது கேள்விக்குறி.

பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்பான முயற்சிகளும் வாக்குறுதிகளும் முப்பது ஆண்டுகள் இலட்சக்கணக்கான உயிர்களைப்பலி கொடுத்து ஏங்கி நின்ற ஒரு சமூகத்தின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தப் போதியதல்ல என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். "இனிமேல் புலியென்ன எலி கூட எழும்ப முடியாது. அப்படித்தான் தப்பித் தவறி எதாவது எழும்பினா

அதீத நம்பிக்கை கொண்டிருப்பதுவும் சரியானது அல்ல. இருபத்திரண்டு வருடங்களாக கரைத்துக் கொட்டி கடைசியில் 18 வது அரசியல் யாப்பு திருத்தம் மூலம் சுரண்டி எடுத்த பின்னர் இப்போதும் கொஞ்சநஞ்சமாக மாகாண சபைகளிடம் ஒட்டியிருக்கும் அதிகாரப் பகிர்வை அப்படியொரு அதீத நம்பிக்கையில் அரசினர் முற்றாக இல்லாமல் ஆக்கிவிட எண்ணுவது ஆப்பிழுத்த குரங்கின் கதையாக முடியாமல் இருந்தால் அது ராஜபக்சாக்களின் புண்ணியமாகும்.

எழுபத்தைந்து ஆண்டுகளாக இனவாத அரசியற் புண்களால் புரையோடிப் போய்க் கிடக்கும் இனப்பிரச்சினைக்கு விரைந்து அரசியல் தீர்வு காண்பது அவசியமே, மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் சிவில் நிர்வாகங்களிலும் இருந்து இராணுவத் தலையீடுகள் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்ற விடயங்கள் பிரதானமானவையே என்றாலும் மக்களின் பொருளாதார முன்னேற்றங்கள், சமூக கலாச்சார வளர்ச்சிகள், அச்சமற்ற வாழ்க்கை மற்றும் பொதுவான மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் பேணப்படுதல் என்பனவும் மிகப் பிரதான மானவையே.

அந்த வகையில் பிறந்துள்ள புதிய ஆண்டு முடிவடைவதற்குள்:-

1) வடக்கு கிழக்கின் எந்த இடத்திலும் இயற்கைக் காரணங்களைத் தவிர்து வேறெந்தக் காரணத்துக்காகவும் மக்கள் அகதிகளாக இருக்கிறார்கள் என்ற நிலையை முற்றாக இல்லாது ஆக்குவது அரசின் முதற் கடமையாகும்.

2) இந்தப் புதிய ஆண்டில் வடக்கின் மாகாணசபைத் தேர்தலை நடத்தவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. எப்பவுமே நடக்காது என்பதை விட காலம் தாழ்த்தி இப்பவாவது நடப்பது நல்லதே என ஒரு பழமொழி உண்டு. அந்த வகையில் இந்த புதிய ஆண்டில் வடக்கின் மாகாணசபைத் தேர்தலை நடத்தி புதிய மாகாணசபையை செயற்பட வைக்கும் போது அந்த சபையானது இல்லாத அதிகாரங்களுக்காகக் குரல் கொடுக்கிற அதேவேளை இருக்கிற அதிகாரங்களையும் வாய்ப்புகளையும் வளங்களையும் பயன்படுத்தி வடக்கு மக்களின் வாழ்வில் நம்பிக்கையொளியை ஏற்றி வைப்பதுவும் முடிந்த அளவுக்கு சமூக, அரசியல், பொருளாதார முன்னேற்றங்களை ஏற்படுத்துவதில் அக்கறை காட்டுவதுவும் எல்லாவற்றையும் விடப் பிரதானமானவை ஆகும்.

3) விதைக்கப்பட்டு புதையுண்டு கிடக்கும் நிலக்கண்ணி வெடிகளால் யாரும் பலியாகும் நிலையோ முடமாகும் நிலையோ ஏற்படக் கூடாது.

4) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களெல்லாம் கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் வாழும் நிலை ஏற்படுத்தப்படல் வேண்டும்.

5) பல பிரதானமான பெருவீதிகளின் அபிவிருத்தி வேலைகள் அரை குறையில் நிற்பதால் அவ்வீதிகளில் பயணம் செய்யும் மக்கள் தமது சுவாசப்பைகளை புழுதியினால் நிறைத்தபடிதான் பயணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே இந்த வீதிகளின் அபிவிருத்தி வேலைகளெல்லாம் இவ்வாண்டுக்குள் முடிவடைய வேண்டும்.

இவ்வாறான முக்கியமான விடயங்கள் இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும் வகையில் நடைமுறையாக வேண்டும் என எல்லா அரசியற் தலைவர்களும் திடசங்கற்பத்துடன் செயற்பட வேண்டும். அதுவே அவர்களை நம்பியிருக்

www.padippakam.com



# வடக்கு மாகாணசபை தேர்தல் தள்ளிப்போடப்படக் கூடாது

**தமிழ் மக்களுக்கு நாட்டின் ஜனநாயக நடைமுறைகள் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு முறைப்படி வடக்கு மாகாணசபை தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கும், இதன் மூலம் நாட்டின் நிர்வாகத்தில், முன்னேற்றத்தில், அபிவிருத்தியில் பங்குபற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.**

புலிகள் நாட்டு பிரிவினையை இலக்காகக் கொண்டிருப்பதுடன் பயங்கரவாத நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்டவர்களாயுமிருப்பதால் அவர்களோடு ஜனநாயக வழிமுறையில் இனப்பிரச்சினக்கு தீர்வு காண முடியாது. ஜனநாயக வழியில் செயற்படும் இதர கட்சிகளோடு பேசி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தயாராயிருப்பதாக தெரிவித்து வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், புலிகளுடனான யுத்தம் முடிவுற்று 4 வருடங்களை எட்டவுள்ள போதும் முறைப்படி வடக்கு மாகாண சபைக்கு நடாத்தப்பட வேண்டிய தேர்தலைக் கூட நடத்தாமல் பின்போட்டு வருகின்றது.

30 வருட யுத்தத்தின் பின்னர் வடக்கின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள், உட்கட்டுமானப் பணிகள், மீள்குடியேற்றம்,



புனர்வாழ்வு, புனர் நிர்மாண நடவடிக்கைகள் என்பன இடம் பெற வேண்டியுள்ளது. இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டும், நடைபெற்றும் வருகின்றன.

நாட்டின் இதர 8 மாகாணங்களிலும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடாத்தப்பட்டு மாகாண சபைகள் இயங்கி வருகின்றன. அவை மாகாணத்தின் அரசியல் நிர்வாக விடயங்களுக்குத் தலைமை ஏற்றிருக்கின்றன. வடக்கு மாகாணத்தில் இன்னும் மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படவில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் தலைமைத்துவம் இல்லாமையால் மக்களின் பங்கேற்பு தொடர்ந்தும் முற்றாக அல்லது பகுதியளவில் நிராகரிக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் அனைத்தையும் மத்திய அரசாங்கம் முழுமையாக தனது கையில் வைத்துக் கொண்டுள்ளது. யுத்தத்தின் போது யாழ் கட்டளைத் தளபதியாக யாழ் மாவட்டத்தை நிர்வகித்து வந்த மேஜர் ஜெனரல் சந்திரசிறி அவர்களே யுத்தம் முடிவடைந்த பின் வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டு வடக்கின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தமிழ் மக்களின், சிந்தனை முறையில், கருத்துக்களில், நம்பிக்கைகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாதது இயல்பானதே.

வட மாகாணத்தில் 1983 ற்கு முன்னர் வசித்து வந்த சிங்களக் குடும்பங்களும் முஸ்லிம் குடும்பங்களும் மீளக் குடியமரும் வரை வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடாத்தப்படக் கூடாது என சிங்கள கடும்போக்காளர்கள் கோரிவருகின்றனர். இது தேர்தல் தாமதத்தை நியாயப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவும் அமைந்துள்ளது.

யுத்தம் காரணமாக பல ஆயிரக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையில் உள்ளனர். ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக வாழ்கின்றார்கள். மேற்கு நாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்கள் பொருளாதார ரீதியான காரணங்களுக்காக இடம்பெயர்ந்திருப்பினும் அவர்களிலும் கணிசமானவர்கள் அச்சுறுத்தல் மற்றும் யுத்த காரணங்களால் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களெல்லாம் திரும்பி வராமலே இங்கு எத்தனையோ தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன.

சிங்கள மக்களோ, முஸ்லிம் மக்களோ வடக்கு மாகாணத்தில் மீளக் குடியமர்வதற்கு இப்போது எந்த விதமான அச்சுறுத்தலும் நிலவுவதாக தெரியவில்லை. வீதி அபிவிருத்தி, கட்டுமானப்பணிகள், மற்றும் வியாபாரம் போன்ற நடவடிக்கைகளில் யுத்தத்திற்கு முன்னர் இங்கு வாழ்ந்த சிங்கள மக்களை விடவும் பல மடங்கு அதிகமானவர்கள் வடபகுதியில் நிலைகொண்டுள்ளார்கள். வடபகுதியின் கிராமங்கள் தோறும் தினசரி வியாபர நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதுவரை, நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தல் உட்பட பாராளுமன்றத் தேர்தல்கள், உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதன் போதும் முன்வைக்கப்படாத ஒரு பிரச்சினையாக இந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர வேண்டும் என்ற பிரச்சினை கிளப்பப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு முழு யாழ் மாவட்டத்திற்குமான 9 பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பாராளுமன்ற தேர்தல் ஊர்காவற்துறை தேர்தல் தொகுதியில் மட்டுமே நடைபெற்றது. 9 பாராளுமன்ற பிரதிநிதிகள் தெரிவுசெய்யவும் பட்டார்கள்.

அதன்பின்னர் வடக்கு கிழக்கில் நடைபெற்ற பல தேர்தல்களை பகிஸ்கரிக்கக் கோரிய புலிகளும், புலிகள் சார்பானவர்களும் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்திருப்பதை காரணமாகக் கூறியே சகல தேர்தல்களையும் தமிழ் மக்கள் பகிஸ்கரிக்க வேண்டும் என்று கோரினார்கள். ஆனால், அரசாங்கம் அனைத்து தேர்தல்களையும் நடாத்தியது: மக்கள் வாக்களித்தார்கள்: பிரதிநிதிகள் தெரிவுசெய்யவும்பட்டார்கள். பகிஸ்கரிப்புக் கோரிக்கைகளை நிராகரித்து இந்த ஜனநாயக நடைமுறையில் பங்கேற்ற சரோஜினி யோகேஸ்வரன், பொ.சிவபாலன் ஆகிய இரு யாழ் மாநகர முதல்வர்கள் உட்பட பல உள்ளுராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் தமது உயிரை அர்ப்பணிக்க வேண்டியிருந்தது.

அரசியல் அமைப்பின் 13வது திருத்தத்தின் அடிப்படையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடாத்தினால் புலிகளுக்குச் சார்பானவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி, புலிகள் ஆயுதங்கள் மூலம் செய்து முடிக்க நினைத்த நாட்டுப் பிரிவினையை இவர்கள் சட்ட ரீதியில் சாதிக்க முயல்வார்கள் என்னும் பிரச்சாரமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் உண்மைநிலை அரசாங்கத்திற்கு தெரியாததில்லை ஆனாலும், இதன் அனுகூலங்களை அனுபவித்துக்கொள்கின்றது. வடக்கில் அரசுக்கு சார்பான ஒரு ஆட்சி அமைய வேண்டும் என்ற அரசாங்கத்தின் பெருவிருப்பே வடக்கு தேர்தல் தள்ளிப் போடப்படுவதற்கான காரணம் என்பது ஊகித்தறியக்கூடியதொன்றே. ஆயினும், இந்த காலதாமதம் அந்த எண்ணத்தை மேலும் பலவீனப்படுத்துவதாகவே கள நிலைமைகள் உள்ளன.

புலிகளின் பிரச்சினை வேறு தமிழ் மக்களின் பிரச்சினை வேறு எனக் கூறிவந்த அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு உருப்படியான அரசியல் தீர்வென்றை வழங்குவதற்கு புலிகள் தடையாக இருப்பதாக கூறிவந்த தலைவர்கள் புலிகளை அடக்கி ஒடுக்கிய பின்னரும் ஜனநாயக ரீதியில் பிரச்சினைக்கு தீர்வுகாணும் திட்டங்களை செயற்படுத்திக்காட்ட முடியாதவர்களாயிருப்பது அத்தகைய செயல்முறைகளை புறக்கணிப்பது புலிகளின் கோஷங்களுக்கு வலுவூட்டுவதாகவே அமையும்.

தமிழ் மக்களுக்கு நாட்டின் ஜனநாயக நடைமுறைகள் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு முறைப்படி வடக்கு மாகாணசபை தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கும், இதன் மூலம் நாட்டின் நிர்வாகத்தில், முன்னேற்



றத்தில், அபிவிருத்தியில் பங்குபற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் தமது சொந்த அனுபவங்கள் ஊடாக கற்றுக்கொள்ளவும், சிறந்த அரசியல் தலைமைத்துவத்தை அடையாளம் கண்டுகொள்ளவும் இந்த ஜனநாயக செயல்முறையே உதவும்.

இதனைவிடுத்து பலப்பிரயோகமும் அடக்குமுறையும், உரிமை மறுப்புக்களும், உணர்ச்சி ஊட்டல்களும் தற்காலிக வெற்றியைத் தரலாம் ஆனால், இதன் மூலம், வெறுப்பும், விரோதமும் வளருமே தவிர நல்லிணக்கமும், சமாதானமும் மலராது. என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் புரிந்துகொள்வது அவசியம். ●

---

## வரலாற்றில் கறைபடிந்த நாள் ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

தது. மாற்று கட்சியினரும், தலைவர்களும், சக சமூகங்களும், கவிஞர்கள் மனித உரிமைவாதிகள், முற்போக்காளர்கள் உடல் மீதியின்றி அழிக்கப்பட்டது மாத்திரமல்ல, தலைமறைவாகுவதற்கும், இடம்பெயர்வதற்கும் புலம் பெயர்வதற்கும் நிர்பந்திக்கப்பட்டார்கள்.

இன்று தலைமையில்லாத சமூகமாக, ஊடகங்கள் இல்லாத பிரச்சார சாதனங்கள் (ஊது குழல்கள்) மிஞ்சிய சமூகமாக மாறியதன் பிரதான காரணம் இதுதான்.

பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் -பாரதி

இதுதான் நிகழ்ந்தது.

சமூகம் பற்றிய எழிலார்ந்த கனவுகளுடன் புறப்பட்டவர்கள் மானிட விடியலைக்கனவு கண்டவர்கள் கேட்பாரின்றி தெருக்களிலும், வீடுகளிலும், சித்திரவதைக் கூடங்களிலும் கொல்லப்பட்டார்கள். வதை முகாம்களில் வாடினார்கள்.

பேரினவாதம் பற்றி என்ன குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதோ பல சந்தர்ப்பங்களில் அதையெல்லாம் விஞ்சியதாக புலிப்பாசிசத்தின் செயற்பாடுகள் அமைந்தன. வெவ்வேறு கருத்துக்கள் வெவ்வேறு இயக்கங்கள் இருக்கக் கூடாது. மாற்றுகளுக்கான எந்த இடைவெளியும் இல்லை என்ற நிலை எமது சமூகவாழ்வை காட்டுமிராண்டி நிலைக்கு தள்ளியது.

களாக இருந்தன என்பதை இன்றைய அற எழுத்து விற்பன்னர்கள்?? எவரும் மூச்சு கூட விடுவதில்லை. பாசிசத்தை நியாயப்படுத்துவதற்கு "எல்லாரும் தான் பிழைவிட்டவை" என குணாம்ச ரீதியாகவும் அளவு ரீதியாகவும் பெருநாசம் விளைவித்த ஒன்றுக்கு இவர்கள் நியாயம் சொல்வார்கள். ஏதோ ஒரு சில தவறுகள் தான் நடந்தன என சப்பை கட்டுவார்கள். அதுவும் சரி செய்யப்பட்டிருந்தால் எல்லாம் நேர்த்தியாக இருந்திருக்கும் என்பதுபோல் "நெஞ்சில் உரமும் இன்றி நேர்மை திறனும் இன்றி" எழுதுவார்கள்.

இந்த சமூகத்தில் மாற்றதிற்காக நின்றவர்கள் பிரதானமாக தமிழ் பாசிசத்தால் அழிக்கப்பட்டார்கள் என்பதே உண்மை.

மீண்டும் மீண்டும் பாசிசத்தின் நிழலில் சமூகத்தை நிறுத்துவதற்கு முனைபவர்கள் இன்றும் இருந்துகொண்டு தான் இருக்கிறார்கள். பௌத்த சிங்கள மேலாண்மைவாத சக்திகளும் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருகின்றன.

இராணுவ பிரசன்னமும், ஆத்திரமூட்டலும் ஒரு நெருக்கடியான நிலையை நோக்கி சமூகத்தை இட்டுச் செல்லும் போக்கு பரவலாக அப்பட்டமாக காணப்படுகிறது. இந்த சமூகத்தில் சிறந்தவை எல்லாவற்றையும், உன்னதமானவை எல்லாவற்றையும் அழித்ததில் தமிழ் பாசிசத்திற்கு பங்குண்டு என்பதை நாம் மனதில் இருத்தியாக வேண்டும்.

குள் இருந்து நெருப்புக்குள் விழுந்த கதையாக இருக்கும். பேரழிவுகளுக்கும், தமிழ் சமூகம் எதையுமே பெறமுடியாமல் போனதற்கும் தமிழர் போராட்டம் ஒரு சிதைவியக்கமாக மாறியதற்கும் இந்த தமிழ் பாசிசம் பங்களித்தது என்பதே யதார்த்தம்.

கடந்தகாலம் நிதானமாக பாரபட்சமின்றி ஆராயப்பட வேண்டும்.

துரோகம் பற்றி பேசுபவர்கள் புலிகளைத் தவிர்ந்த அனனத்து இயக்கங்கள் அரசியல் கட்சிகளுக்கும் துரோகப்பட்டம் சூட்டுவார்கள். ஆனால், இன்று புலிகளின் பிரதான தலைவர்கள், உறுப்பினர்கள் கணிசமானோர் எங்கு நிற்கிறார்கள் என்பது பற்றி மூச்சு விடுவதில்லை. இந்த சகோதரப் படுகொலைகளில் உடல் மீதியின்றி அழிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் மிகப் பெறுமதி வாய்ந்த மனிதர்கள்.

ஜனநாயக உணர்வு கொண்ட முற்போக்கான பிரிவு தேடித்தேடி அழிக்கப்பட்டது. இந்த மனிதர்களின் இழப்பு சமூகத்தில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறதென்பதே உண்மை. இன்று இனப்பிரச்சினைக்கு தீர்வு, இராணுவமயமாக்கலுக்கெதிராக அஹிம்சை வழியில் எதிர்ப்பியக்கம் நடத்துவதற்கு கூட ஆட்களை கண்டுபிடிக்கமுடியாமல் இருக்கிறது.

எமது சமூகத்தில் நிலவும் பெரிய பிரச்சனை என்னவென்றால் உண்மையைப் பேசுவோ, உண்மையைக் கண்டறியவோ

களுக்கு இழைத்த அநீதிகளையெல்லாம் எவ்வாறு "பயங்கரவாதம்" என்ற ஒற்றைச் சொல்லால் மூடி மறைக்க முயலுகிறதோ "துரோகம்" என்ற ஒற்றைச் சொல்லினால் தமிழ் பாசிசம் தனது அநியாயங்களுக்கெல்லாம் நியாயம் சொன்னது, சொல்லிக் கொண்டிருக்கிறது.

மாற்று இயக்கங்கள் தவறிழைக்கவே இல்லை என்று கூறிவிட முடியாது..

தவறுகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அது பாசிசமாக இருக்கவில்லை.

முட்டிமோதலுடன் பேசுவதற்கான இடைவெளி இருந்திருந்தால் இயக்கங்கள் உருப்படியாக சில காரியங்களை மக்கள் சார்பாக ஒப்பேற்றியிருக்க முடியும். பாசிசம் உலகில் வேறு இடங்களில் நிகழ்ந்ததைப் போலவே பாரிய சமூக அனர்த்தத்திற்கு வழி வகுத்தது. நாம் தனிப்பட்ட மனிதர்களை இங்கே குறிப்பிடவில்லை. ஒரு மனிதகுல விரோத கருத்தியல் பற்றியே!!

இது 80 களுக்கு முன்னரே உருவாக்கப்பட்டது. அது சமூக ஜனநாயகத்திற்கும், முன்னோக்கிய இயக்கத்தின் மீதும் பாரிய அனர்த்தங்களை விளைவித்தது. உண்மையின் வெளிச்சத்தில் நாம் முன் செல்ல வேண்டும். பாசிசத்தை சமூகத்தினுள் உயிர்ப்பிக்கும் முயற்சிகள் சமூகத்தை மீண்டும் பேரழிவை நோக்கியே இட்டுச் செல்லும்.

சமூக நல்லெண்ணமும், அற உணர்வுகள் மேலோங்குவதற்குமான இடைவெளி அதிகரிக்க வேண்டும். சமூக ஜனநாயக சக்தி

படிப்பகம்

www.padippakam.com





தோழர் கபூர், அல்வாய்

# தமிழ் இனத்தின் அரசியல், ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தில் தம் உயிரை அர்ப்பணித்த தோழர்களை நினைவு கூருவோம்

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து டிசம்பர் மாதத்தில் உயிர் நீத்த தோழர்கள் இவர்கள்.
அவர்களின் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது, அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை
முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத் தோழர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்.



தோழர் ரஞ்சித், தம்பிலுவில்

| முழுப்பெயர் | தோழர் | இற. திகதி | வசிப்பிடம் | காரணம் |
|---|---|---|---|---|
| இ. புவனேந்திரன் | ஜீவன் | 14.12.1984 | மண்டூர் | அதி.படை |
| கே.பாக்கியராஜா | மாதவன் | 16.12.1985 | மல்வத்த | இராணுவம் |
| செ..மணிசேகன் | நிருபன் | 16.12.1985 | காரைதீவு- 01 | இராணுவம் |
| வி.விக்கினேஸ்வரன் | அருண் | 21.12.1985 | காரைதீவு - 02 | குண்டு |
| கந்தப்பெருமாள் குமார் | ரஞ்சித் | 16.12.1986 | தம்பிலுவில் - 02 | புலிகள் |
| கே.கோகுலதாசன் | ரகு | 16.12.1986 | தம்பிலுவில் - 02 | புலிகள் |
| எஸ்.கீர்த்திராஜா | பண்ணை | 16.12.1986 | தம்பிலுவில் - 01 | புலிகள் |
| எஸ்.சிவசுப்பிரமணியம் | சுதா | 16.12.1986 | தம்பிலுவில் - 02 | புலிகள் |
| பி.வசந்தராஜா | அன்பு | 16.12.1986 | தம்பிலுவில் - 02 | புலிகள் |
| கே.கோகுராஜ் | ரகு | 16.12.1986 | தம்பிலுவில் - 02 | புலிகள் |
| எஸ்.தவராஜன் | ஞானம் | 16.12.1986 | தம்பிலுவில் - 02 | புலிகள் |
| பி.கோபாலபிள்ளை | கோபால் | 16.12.1986 | களுதாவளை | புலிகள் |
| ஞானப்பிரகாசம் | ரஞ்சன் | 16.12.1986 | தம்பிலுவில் | புலிகள் |
| | காந்தன் | 13.12.1986 | மட்டக்களப்பு | புலிகள் |
| எம்.தர்மலிங்கம் | லிங்கம் | 25.12.1986 | தாளங் குடா | புலிகள் |
| | குமார் | 25.12.1986 | தாளங் குடா | புலிகள் |
| | குணம் | 25.12.1986 | தாளங் குடா | புலிகள் |
| வி.வித்தியாகரன் | நிமால் | 15.12.1986 | வந்தாறுமூலை | அதி.படை |
| சபா. தவநாயகம் | வினோத் | 16.12.1986 | முறகொட்டாஞ்சேனை | அதி.படை |
| | மணி | 16.12.1986 | கிரான் | அதி.படை |
| பி.மகேஸ்வரன் | விஜி | 04.12.1986 | மகிளூர் | அதி.படை |
| கணபதிப்பிள்ளை | | 16.12.1986 | தம்பிலுவில் - 02 | புலிகள் |
| மு. சகாதேவன் | விக்கி | 03.12.1987 | வீரமுனை | புலிகள் |
| எஸ்.ஆனந்தம் | விணோத் | 25.12.1987 | ஐயங்கேணி | புலிகள் |
| | அருள் | 17.12.1987 | மகிளவெட்டுவான் | புலிகள் |
| | நாராயன் | 08.12.1988 | மட்டக்களப்பு | புலிகள் |
| சபா. புஸ்பராசா | புஸ்பன் | 25.12.1989 | செட்டிபாளையம் | புலிகள் |
| அ. இக்னேசியஸ் | லக்ஸ்மன் | 25.12.1989 | கல்லடி | புலிகள் |
| எஸ்.அருள் | குறூஸ் | 15.12.1986 | வந்தாறுமூலை | புலிகள் |
| ஐ.குலசிங்கம் | சின்னபாபு | 00.12.1987 | காரைதீவு | புலிகள் |
| | மகேந்திரன் | 31.12.1987 | அட்டபாலம் | புலிகள் |
| ஏ.லோரன்ஸ் | தம்பி | 00.12.1989 | மட்டக்களப்பு | புலிகள் |
| | சேகர் | 00.12.1989 | கயாங்கேணி | புலிகள் |
| தருமலிங்கம் | | 03.12.1985 | மண்டூர் | |
| எஸ். சாமித்தம்பி | சூரி | 23.12.1985 | சித்தாண்டி | |
| அ. கோணேசமூர்த்தி | வில்லியம் | 26.12.1985 | மண்டூர் | |
| சீனித்தம்பி கரிகரன் | முத்து | 30.12.1989 | வாழைச்சேனை | |
| தங்கராசா குணசேகரம் | குணம், | 25.12.1989 | கறுவாக்கேணி | |
| சோ. பரமேஸ்வரன் | மோகன் | 24.12.1989 | முதலைக்குடா | |
| கேதாரம் குகதாசன் | டெனி | 20.12.1989 | மாங்காடு | |
| தங்கராசா ஆறுமுகம் | கஜன் | 31.12.1990 | ஏறாவூர் | |
| சி. வேதநாயகம் | நிதி | 26.12.1997 | ஏறாவூர் | |
| த. கோணேஸ்வரன் | கிரி | 23.12.2000 | மண்டூர் | |
| பூ. அழகுதுரை | | | மண்டூர் | புலிகள் |



தோழர் பிரபு
வல்வெட்டித்துறை



தோழர் சின்னபாபு
காரைதீவு



தோழர் விக்கி
வீரமுனை



தோழர் சிவபாலன்
பலாலி

| முழுப்பெயர் | தோழர் | இற. திகதி | வசிப்பிடம் | காரணம் |
|---|---|---|---|---|
| நா. செல்வகுமார் | சாள்ஸ் | 08.12.1989 | பண்டத்தரிப்பு | புலிகள் |
| நமசிவாயம் | நமசி | 27.12.1988 | தொண்டமானாறு | புலிகள் |
| நடராஜா சிவலிங்கம் | ரமேஸ் | 02.12.1989 | கரவெட்டி | புலிகள் |
| கா. கணேசலிங்கம் | அன்ரனி | 03.12.1988 | புன்னாலைக்கட்டுவன் | புலிகள் |
| ப.பாலசுப்ரமணியம் | கபூர் | 14.12.1986 | பருத்தித்துறை | புலிகள் |
| பசுபதி கனகசுந்தரம் | துரை | 13.12.1986 | தாளையடி | புலிகள் |
| பசுபதி தங்கராஜா | ரூபன் | 03.12.1988 | புன்னாலைக்கட்டுவன் | புலிகள் |
| வை. கெங்கேஸ்வரன் | சிவபாலன் | 29.12.1984 | வசாவிளான் | விபத்து |
| யோசப் சுரேஸ் | தங்கேஸ் | 28.12.1990 | குருநகர் | |
| யோ. எ. ரொனால்ட் | | 28.12.1990 | குருநகர். | புலிகள் |
| சீனிவாசம் ஞானம் | ரவி | 03.12.1988 | மயிலங்காடு | புலிகள் |
| விமல் | | 00.12.1989 | கைதடி | புலிகள் |
| வல்லிபுரம் ரவீந்திரன் | பிரபு | 09.12.1989 | வல்வெட்டித்துறை | புலிகள் |
| ஏ.யு.மொகமட் | மொகமட் | 11.12.1989 | வாழைச்சேனை | புலிகள் |
| செ. புவனேஸ்வரன் | | 24.12.1994 | காங்கேசன்துறை | புலிகள் |
| க. பாலச்சந்திரன் | | 18.12.1989 | தெல்லிப்பளை | புலிகள் |
| பற்குணம் நமசிவாயம் | | 27.12.1988 | தொண்டமனாறு | புலிகள் |

| முழுப்பெயர் | தோழர் | இற. திகதி | வசிப்பிடம் | காரணம் |
|---|---|---|---|---|
| கிருஸ்ணன் சிவகுமார் | காந்தி | 16.12.1988 | சாவகச்சேரி. | புலிகள் |
| வேலன் இராசேந்திரம் | பிரபு | 01.01.1990 | கைதடி | புலிகள் |
| | அருண் | 30.12.1988 | நாவற்குழி | புலிகள் |
| ரமையா ஜோசெப் | கேடி | 17.12.1989 | யாழ்ப்பாணம் | புலிகள் |
| ஏனஸ் பாஸ்கரன் (ரகு) | செல்வின் | 03.12.1988 | குருநகர் | புலிகள் |
| செ. குணசேகரம் | சந்திரன் | 15.12.1988 | கந்தர்மடம் | இராணுவம் |
| | வசந்தன் | 17.12.1989 | ஏழாலை | புலிகள் |
| கணேசலிங்கம் | கணேஸ் | 00.12.1989 | பச்சனூர் | புலிகள் |
| அறிவழகன் | அறிவு | 00.12.1989 | கங்குவெலி | புலிகள் |
| கந்தசாமி | விசு | 00.12.1989 | ஈச்சலம்பத்தை | புலிகள் |
| குபேரன் | காந்தி | 13.12.0986 | நிலாவெளி | புலிகள் |
| கோபு | சுதா | 13.12.1986 | திருகோணமலை | புலிகள் |
| | சத்தியம் | 1986.12.13 | அடம்பன் | புலிகள் |
| | பல்லவன் | 1986.12.13 | முருங்கன் | புலிகள் |
| செல்வம் | ஜவ்பார் | 1986.12.13 | முருங்கன் | புலிகள் |
| | மணியம் | 1989.12.28 | பூவரசன்குளம் | புலிகள் |
| பாலகிரிஷ்ணன் | தயா | 1989.12.28 | பண்டாரிக்குளம் | புலிகள் |
| சிவலிங்கம் | சிவா | 1989.12.28 | மலையகம் | புலிகள் |
| | அஜித் | 1989.12.28 | மலையகம் | புலிகள் |
| | திட்டிபாலா | 1989.12.28 | மலையகம் | புலிகள் |
| | ராஜ்தீப் | 1989.12.28 | மலையகம் | புலிகள் |
| | சுதாகர் | 1989.12.28 | மலையகம் | புலிகள் |
| | அல்பிரட் | 1989.12.28 | கண்ணாட்டி | புலிகள் |
| | வரதன் | 1989.12.28 | பூந்தோட்டம் | புலிகள் |
| | பாஸரின் | 1989.12.28 | பூவரசன்குளம் | புலிகள் |
| | ஆறுமுகம் | 1989.12.28 | மலையகம் | புலிகள் |

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று வருடந்தோறும் இம் மாதத்தில் உயிர் நீத்தவர்களில் எகம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம் இங்கு நினைவு கூரப்பட்ட தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்துவதற்கு அவர்களது படங்கள் அவர்கள் தொடர்பான தகவல்களை எமக்கு அனுப்பி உதவுமாறு தோழர்கள் அன்பர்கள் நண்பர்கள் குடும்பத்தவர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இங்கு இடம்பெறத் தவறிய தோழர்கள் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் படங்களை வைத்திருப்பவர்கள் அவற்றையும் எமக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகின்றோம்.

| முழுப்பெயர் | தோழர் | இற. திகதி | வசிப்பிடம் | காரணம் |
|---|---|---|---|---|
| | பத்மன் | 1989.12.28 | மலையகம் | புலிகள் |
| சுப்பிரமணியம் | மணியம் | 1989.12.28 | பேயாடிக்கூளாம்குளம் | |
| இராகவன் | ராகவன் | 1989.12.28 | மலையகம் | புலிகள் |
| ராஜன் | ரேகன் | 1989.12.28 | மூன்றுமுறிப்பு | புலிகள் |
| புஸ்பராசா | புஸ்பராசா | 1989.12.28 | ஓமந்தை | புலிகள் |
| | சத்தி | 1989.12.28 | யாழ்ப்பாணம் | புலிகள் |
| துரைசிங்கம் | அன்பு | 1989.12.27 | பூவரசன்குளம் | புலிகள் |
| | சாந்தா | 1989.12.27 | வுவனியா | புலிகள் |
| ரட்ணவீர | மதன் | 1989.12.27 | சூசைப்பிள்ளையார்குளம் | புலிகள் |
| யோகராஜா | இன்பம் | 1989.12.27 | புளியங்குளம் | புலிகள் |
| செல்வநாயகம் | | 1989.12.27 | மலையகம் | புலிகள் |
| ஜெயதேவன் | | 1989.12.27 | கோவில்குளம் | புலிகள் |
| | லிங்கம் | 1989.12.27 | நொச்சிமோட்டை | புலிகள் |
| | குமார் | 1989.12.27 | யாழ்ப்பாணம் | புலிகள் |
| | சந்திரபாலா | 1989.12.27 | தேக்கம்காடு | புலிகள் |
| பாலசுப்பிரமணியம் | சங்கர் | 1989.12.27 | பட்டாணிச்சூர் | புலிகள் |
| | திலிப் | 1989.12.27 | சூசைப்பிள். குளம் | புலிகள் |
| | அமுதன் | 1989.12.27 | நைநாமடு | புலிகள் |
| | ராஜன் | 1989.12.27 | யாழ்ப்பாணம் | புலிகள் |
| | பீற்றர் | 1989.12.27 | மலையகம் | புலிகள் |
| எஸ். மணிவண்ணன் | ரவி | 1989.12.27 | பூவரசன்குளம் | புலிகள் |
| கணேஸ் | | 1989.12.27 | பூவரசன்குளம் | புலிகள் |
| | சுரேஸ் | 1989.12.27 | பூவரசன்குளம் | புலிகள் |
| | சீலன் | 1989.12.27 | பூவரசன்குளம் | புலிகள் |
| | யோகன் | 1989.12.27 | புவரசன்குளம் | புலிகள் |
| | ரஞ்ஜன் | 1989.12.27 | பூவரசன்குளம் | புலிகள் |
| | ஜோதி | 1989.12.27 | சஸ்திரிகூளாங்குளம் | புலிகள் |
| | டேவிட் | 1989.12.27 | சாதிரிகூளாங்குளம் | புலிகள் |
| | நரேஷ் | 1989.12.27 | பாவற்குளம் | புலிகள் |
| | அஷோக் | 1989.12.27 | சாஸ்திரிகூளாங்குளம் | புலிகள் |
| | சின்னவ்ன் | 1989.12.27 | பூந்தோட்டம் | புலிகள் |
| தம்பிராசா | பாலா | 1989.12.27 | பூவரசன்குளம் | புலிகள் |
| புஷ்ப்பம் | கேசவன் | 1989.12.27 | பூவரசன்குளம் | புலிகள் |
| சந்திரகுமார் | ராஜா | 1989.12.27 | பூவரசன்குளம் | புலிகள் |
| ராஜேந்திரன் | கலுமாலி | 1989.12.27 | மலையகம் | புலிகள் |
| | கந்தையா | 1989.12.27 | மலையகம் | புலிகள் |
| கலைச்செல்வன் | ரமேஷ் | 1989.12.27 | மலையகம் | புலிகள் |
| படிப்பகம் | மகேந்திரன் | 1989.12.27 | கோவில்குளம் | புலிகள் |
| | கிட்டு | 1989.12.27 | மலையகம் | புலிகள் |

www.padippakam.com



# இலங்கையில் நலிவுற்று வரும் அற உணர்வுகள்

## வெவ்வேறு தமிழ் இயக்கங்களும் தவறுகளை இழைத்திருப்பினும் அவை புலியிசத்துடன் ஒப்பிட முடியாதவை

இலங்கையில் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான அக்கறை இலங்கை அரசமட்டத்தில் அறவே இல்லை என்றாகிவிட்டது.

1956 பண்டா செல்வா ஒப்பந்தம், இந்திய இலங்கை ஒப்பந்தம், சந்திரிகாவின் அரசியல் தீர்வு யோசனைகள், ஒஸ்லோவின் முயற்சிகள், மகிந்தவின் அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவரை பார்த்தாயிற்று. தற்போது சர்வரோக நிவாரணி பாராளுமன்றத் தெரிவுக்குழு என்கிறார்கள்.

ஆனால், இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்கான அறிகுறிகள் எதுவும் அரச மட்டத்தில் இல்லை.

இந்தியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் ஐநாவின் வலியுறுத்தல்களுக்கு தந்திரமான கதைகளைச் சொல்லி இழுத்தடிக்கும் போக்கே காணப்படுகிறது.

உண்மையைக் கண்டறியும் குழுவும் அத்தகைய தந்திர முயற்சிகளில் ஒன்றே.

அதனால் தான் உண்மைகளைக் கண்டறியும் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைச் சாத்தியமாக்குமாறு ஐ. நா மனித உரிமை அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ள நிலையில் கச்சல் மருந்தை உடகொள்ளச் சொன்னது போன்ற அருக்களிப்பை இலங்கை அரசு காட்டிக் கொண்டிருக்கிறது.

இன்று பிரதம நீதியரசர் சிராணி பண்டார நாயக்கா மீதான கோபமும் பிரதானமாக திவிநெகும சமூக அபிவிருத்தி? மசோதா தொடர்பாக உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு காரணமாய் அமைந்துள்ளது.

அதாவது பாராளுமன்றம் தவிர இன்னுமொரு சட்டவாக்க நிறுவனமும் இலங்கையில் இருக்கிறது மாகாண சபைகளிடமும் அனுமதி பெறவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறிவிட்டது

சமுர்த்தி (வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழ்பவர்களின் வேலைவாய்ப்பு, மற்றும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டம்), தெற்கு அபிவிருத்தி, மத்திய மாகாண அபிவிருத்தி, போன்ற பெரும் நிதியாதாரங்களுடன் தொடர்புடைய விடயங்களை அமைச்சர் பசிலிடம் ஒப்படைப்பதற்கு நீதிமன்றம் தடையாக இருக்கிறது.

இதனுடன் ஆயுள் பரியந்தம் அதிகாரத்தில் இருப்பதற்கான நிகழ்ச்சி நிரலுக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்று குடும்ப அரசை ஸ்தாபிக்க முனைபவர்கள் அச்சப்படுகிறார்கள்.

அதிகாரப்பரவலாக்கல் விடயம் நாட்டின் இறையாண்மைக்கு சிங்கள மக்களுக்கு எதிரானதென்ற கருத்தே ஆட்சியாளர்களால் வளர்த்தெடுக்கப்படுகிறது.

இன சமூகங்களின் சட்ட பூர்வமான உரிமைகளை விட, மனித தர்மத்தின் அடிப்படையான விடயங்களை விட அரசை அனுசரித்து நடந்துகொள்ளல் என்பனவே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களாயினும் சரி, மலையக முஸ்லீம் மக்களாயினும் சரி தற்போதைய அரசுக்கு விசுவாசமான குடிகளாக இருக்கவேண்டுமே தவிர மக்களுக்கான அதிகாரங்களைப்பற்றி சிந்திக்கக் கூடாது. இலங்கை முழுவதுமான அரசியலிலும் குடும்ப ஆட்சிக்கான விசுவாசமே எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த விசுவாசத்தை வெளிப்படுத்தாதவர்கள் கேள்விக்குள்ளாக்குபவர்கள் ஏதோ ஒரு விதத்தில் தாக்குதலுக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

அவர்கள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் என பேதம் எதுவும் இல்லை.

இன உரிமை மாத்திரமல்ல, நாடு தழுவிய ஜனநாயகம் நியாயமான சமூக பொருளாதார அக்கறைகளை வெளிப்படுத்துபவர்கள் தாக்கப்படுகிறார்கள்.

ஊடகவியலாளர் பிரகீத் எகனிலகொட காணாமல் போய் 1000 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. லலித்-குகன் கடத்தல் சம்பவம், தெற்கிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பெண் செயற்பாட்டாளர் திமுத்து ஆட்டிகல மீது கழிவு எண்ணெய் வீசியது, உடுவில்

தலைவர் தாக்கப்பட்டது. இப்போது யாழ் பல்கலைக்கழகமாணவர்கள் மீது தாக்குதல் போன்ற சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

அதிகாரப்பரவலாக்கலுக்கு இடமேயில்லாத ஜனநாயக இடைவெளி இல்லாத அதிகார அரசியல் செயற்பட்டு வருகிறது. இது புலிகளாலும் தமிழ் மக்கள் மீது கடந்த கால்நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கடைப்பிடிக்கப்பட்ட அரசியலை ஏதோ ஒரு வகையில் ஒத்ததே. அது விடுதலையின் பெயரால் நடந்தது.

இது பௌத்த சிங்கள மேலாதிக்கவாதத்திலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

மதகலாச்சார நம்பிக்கைகள் மீதும் நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



தம்புள்ளயில் பள்ளிவாசலை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம் 20 ஏப்ரல் 2012

சாதாரண மக்களை விட இராணுவம் முதன்மையானது என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண மக்களின் விடயங்கள் தொடர்பில் இராணுவத் தலையீடு என்பது இலங்கையை விபரீதமான பாதையில் இட்டுச் சென்று கொண்டிருக்கிறது.

இனங்களின் ஜனநாயக சுதந்திரமும், தனி மனித சுதந்திரம் உள்ளிட்ட ஜனநாயக சுதந்திரமும் தேவைப்படுகிறது.

சமகால நாட்டின் தேவை, உலகுடன் இணைந்து கொள்வதற்கான மாற்றங்கள் இலங்கையில் தேவைப்படுகின்றன.

இலங்கையின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் அதுவே வழி.

இலங்கையின் தமிழ், முஸ்லீம், மலையக சத்திகளும் இலங்கை தழுவிய ஜனநாயக சத்திகளும் அஹிம்சை வழி இயக்கங்களை பாரிய அளவில் முன்னெடுக்க வேண்டிய தருணமிது.

இலங்கையில் மீண்டும் மீண்டும் அறங்கள் அழிந்து வருகின்றன.



தம்புள்ளயில் பயணிகள் பஸ் மீது புலிகள் தாக்குதல் 18 பேர் பலி 02 பெப்ரவரி 2008

பல ஆண்டுகள் தொடர்ச்சியாக இந்த நிலை தார்மீக விழுமியங்கள் தழுவிய எதிர்காலத் தலைமுறைகளின் உருவாக்கத்திற்கு வழிவிடாது. இவ் வழிகள் அடைபடுகையில் மாற்றுப் பாதைகள் தவிர்க்க முடியாத தேவையாகிவிடும்.

13 வதும் இல்லை. நாடு தழுவிய அளவில் ஜனநாயக சுதந்திரமும் இல்லை என்றால் மாற்று என்ன என்ற கேள்விக்கான பதில் இலங்கையின் அதிகாரமையங்களால் ஜீரணிக்க முடியாததாக இருக்கும்.

### தமிழர் தரப்பு வெளிப்படுத்த வேண்டிய பொறுப்புணர்ச்சி

தற்போதைய ஸ்ரீலங்காவின் நிலைமைகளை புலியிசத்தால் பிரதீயீடுசெய்யமுடியாது. அது ஜனநாயகவிரோதமானதும் பேரழிவுக்குமான பாதையாகும்.

பேரினவாத ஆட்சியாளர்கள் எவ்வளவு

மீது ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

வெவ்வேறு தமிழ் இயக்கங்கள் தவறுகளை இழைத்திருந்தாலும் அவை புலியிசத்துடன் ஒப்பிடமுடியாதவை. குணாம்ச ரீதியாகவும் அளவு ரீதியாகவும் மாறுபட்டவை. தமிழ் மக்களின் ஜனநாயக மனித உரிமை சார்பில் புலியிசத்தை பிரதியீடு செய்வதை நாகரிக உலகம் சகித்துக் கொள்ளாது.

எவ்வாறு இலங்கையின் இன்றைய அதிகார சத்திகள் தொடர்பான வெறுப்பு சர்ச்சை உலகளாவிய அளவில் ஏற்பட்டு வருகிறதோ அதேயளவிற்கு புலியிசம் தொடர்பாகவும் நிலவுகிறது.

இதை தமிழர்களில் கணிசமானவர்கள் விளங்கிக் கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் ஈழத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியாகிவிடும்.

தமிழர்கள் தங்கள் உரிமைகளை சகோதர சமூகங்களின் மீதான வெறுப்பின் மூலம் வென்றெடுக்கமுடியாது. ஜனநாயக உணர்வு கொண்ட அனைத்து சமூகங்களுடனும் முற்போக்கு சத்திகளுடனும் தமிழர்கள் உறவு பேண வேண்டும்.

தம்மில் ஒருபகுதியினரை அடக்கி வைத்துக் கொண்டு சுதந்திரத்தை அடைய முடியாது. தமக்குள் சுதந்திரத்திற்கான இடைவெளியை அனுமதிக்கவேண்டும்.

தீண்டாமையும், பெண்ணடிமைத்தனமும் இயல்பானவை என்று கருதும் தமிழ் ஆதிக்க கருத்தியல் அதிர்ச்சி தரக் கூடிது. சகிக்க முடியாதது.

ஒபாமவை ஜனாதிபதியாக்கும் பக்குவம் அமெரிக்க மக்களுக்கிருக்கிறது. ஆனால் எமது சமூகத்தில் வெறுப்பும் குரோதமும் மற்றவர்கள் கீழானவர்கள் என்ற மமதையும் கோலோச்சுகிறது.

இந்நிலை தானாக மாறாது. இதனை மாற்றுவதற்கும் இயக்கம் வேண்டும்.

எந்தவொரு சமூகத்திலும் மேலாதிக்க சத்திகள் சமூகத்தை அடக்கி வைத்திருக்கமுயல்கின்றன. நிரந்தர அடிமை முத்திரையைப் பதித்திருக்கின்றன.

இந்நிலையை மாற்றுவதே சுதந்திரதிற்கான பாதையில் முதல் அடிவைப்பாகும்.

சிந்தனை முறையில் தீவிர மாற்றம் வேண்டும். தீண்டாமைச் சிந்தனை அடியோடு அகல வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் என்னும் போது கடந்து வந்த 30 வருடங்களுக்கு மேலாக நிலவி வரும் மனித உரிமை மீறல்கள் கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

எவ்வளவு பாரதூரமான அநீதிகள் வெவ்வேறு தரப்பினரால் இழைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து எமது படிப்பினை என்ன?

எதிர்காலத்திற்கான திசைவழி இந்தப் படிப்பினைகளிலிருந்து தொடங்குகிறது.

இலங்கையில் இதுவரை இருந்துகொண்டிருக்கும் காழ்ப்புணர்வு, வன்மம், குரோதத்துடன் முன்னோக்கி ஓரடியும் வைக்க முடியாது.

தமிழர்களுக்கு ஆற்றல்கள் இருக்கின்றன. இவை உரிய தருணத்தில் தீர்க்கதரிசனத்துடன் முறையாக உபயோகப்படுத்தாவிட்டால் காலாவதியாகிவிடும்.

அப்படித்தான் வரலாற்றில் பல தருணங்கள் காலாவதியாகின.

இன்றைய சர்வதேரச ஆதரவும் நிரந்தரமானதல்ல. புலியிசத்தை முன்னிறுத்தும் நடவடிக்கைகள் சர்வதேச அரங்கில் தமிழர் அரசியலை வெகு விரைவில் காணாமல் போகச் செய்யலாம். அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. நலிவடையும் போக்கு தெளிவாகத் தெரிகிறது.

இப்பொழுது விழித்துக் கொள்ளவேண்டும். அறிவுபூர்மாகச் சிந்தித்து பரந்த நோக்கங்களுடன் செயற்படவேண்டிய தருணமிது.

குண்டு சட்டிக்குள் குதிரை விடுவது போல்

இன சமூகங்களின உரிமைகள் நாடு தழுவிய ஜனநாயகம் பற்றி அக்கறை கொண்ட சத்திகள் இலங்கையின் வடக்கில் மாத்திரமல்ல. தெற்கிலும் இருக்கிறார்கள். இந்த சத்திகள் தமக்குள் உறவை பலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உலகம் வன்முறையற்ற பாதையில் செல்ல வேண்டும். மக்களின் ஜனநாயக சுதந்திரம் கூட்டாகவும், தனியாகவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் வறுமை ஒழிய வேண்டும். சமூகபாதுகாப்பு உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும். புவிக்கோள் பாதுகாக்கப்பட வேண்டும். என்ற அக்கறை உள்ளவர்கள் 5 கண்டங்களிலும் இருக்கிறார்கள். நாட்டினதும் உலகத்தினதும் நன்மைகருதிச் செயற்படும் பரந்த எண்ணம் எமது மனங்களில் ஊற்றெடுக்க வேண்டும்.

**சுகு - ஸ்ரீதரன்**
**பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப்**

---

**ஏமாற்றம் ...** (1ம் பக்கத் தொடர்ச்சி)

றிசானா நபிக்கிடம் நடாத்தப்பட்ட விசாரணைகளின் போது சட்டத்தரணிகள் எவரும் பிரசன்னமாகாததுடன் உரிய வகையில் மொழிபெயர்ப்பு வழங்கப்படவில்லை எனவும் ரிசானா நபிக் தாக்கப்பட்டதுடன் அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களில் அச்சுறுத்தி, பலவந்தமாக கையொப்பம் பெறப்பட்டதாகவும் வெளியான தகவல்கள் குறித்தும் ஆழ்ந்த கவலையடைவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பிலான பேச்சாளர் தெரிவித்துள்ளார்

ரிசானா நபிக் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டது சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனங்கள் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிரான பிரகடனம் என்பவற்றுக்கு மாறாயுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

1988 ஆம் ஆண்டு திருகோணமலை மூதூரில் பிறந்த றிசானா நபீக் குடும்பச் சூழ்நிலை காரணமாக தொழில் வாய்ப்புத் தேடி தனது 17 வது வயதில் 2005 ஆம் ஆண்டு சவூதி அரேபியாவுக்குப் பயணமானார். இவரை சவுதிக்கு அனுப்பி வைத்த முகவர் றிசானா 1982 இல் பிறந்ததாக போலி கடவுச் சீட்டை பெற்றுக்கொடுத்துள்ளார். சவுதி அரேபியாவில் வீட்டு பணிப்பெண்ணாக பணிபுரிந்த ரிசானாவின் பராமரிப்பில் விடப்பட்ட 4 மாத குழந்தை, பால் புகட்டும் போது மரணமானதால் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த றிசானா நபீக் ஜனவரி 9ம் திகதி சவுதி அரேபியாவில் தூக்கிலிடப்பட்டார்.

றிசானா நபிக்கிற்கு 2007 இல் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்டதை தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ சவுதி அரேபிய மன்னரிடம் அவருக்கு மன்னிப்பளிக்கும்படி கோரியிருந்தார். பல்வேறு மனித உரிமை அமைப்புக்களும் ரிசானா மரணதண்டனையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தன. அனைத்து வேண்டுகோள்களையும் புறக்கணித்த சவுதி அரேபிய அரசு ரிசானா நபிக்கின் கழுத்தை வெட்டி மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

றிசானா நபிக்கிற்கு மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட பின் அவருக்கு அதிலிருந்து விலக்களிப்பதாயிருந்தால் அது றிசானாவை வேலைக்கமர்த்திய, தமது குழந்தையை பறிகொடுத்த குடும்பத்தினர் சம்மதித்தால் மட்டுமே முடியும். அதற்கான நீண்ட கால இடைவெளி இருந்தும் அதற்கான சாத்தியங்கள் சவுதி அரேபியாவின் சட்டங்களில் இருந்தும், எந்த ஒரு முஸ்லிம் அமைச்சரும் அந்த குடும்பத்தவர்களை சந்தித்து இது குறித்து பேசவில்லை என ரிசானாவின் மரணத்தின் பின் குற்றம்சாட்டப்பட்டுகிறது.

றிசானா நபிக் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள பரந்த அளவிலான அக்கறையும், கோபமும், எழுச்சியும், ரிசானா கொல்லப்படுவதற்கு முன்னர் இருந்திருந்தால் ரிசானாவை காப்பா

படிப்பகம்

www.padippakam.com





















# உலகம் தவறான பாதையிலிருந்து நல்வழிக்கு

**மக்கள், நாடு, உலகம் பற்றிய அக்கறை உள்ளவர்கள் உலக இராணுவ மயமாக்கம் பேரழிவுப்பாதையிலிருந்து உலகை மீட்கப் பாடுபட வேண்டும் சமத்துவமற்ற உலக ஒழுங்கு மாற வேண்டும்.**

சுகு - ஶ்ரீதரன்

இன்று உலகத் தலைவர்களை எடுத்துக் கொண்டால் சாதாரண மக்களின் சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்துவது மனித உரிமை ஜனநாயகம் பற்றி அக்கறை கொண்டவர்கள் அருந்தலாகவே காணப்படுகிறார்கள்.

ஆனால், மானிடம் பற்றிய அக்கறை உள்ளவர்களும் ஆங்காங்கு உலகில் வாழத்தான் செய்கிறார்கள். உலகளாவிய அளவில் இத் தலைவர்கள், சமூக ஆர்வலர்களின் பணி முக்கியத்துவம் வாய்ந்தது. இன்று உலகம் எதிர் நோக்கும் நெருக்கடியான சவாலான பாதையிலிருந்து நல்வழியில் செல்ல இவர்களால் உதவ முடியும்.

இந்த புவிக்கோளும் மக்களும் பாதுகாக்கப்படவேண்டும். நிச்சயமற்ற நிலை பூவுலகின் மரணம் நிகழ்ந்து கொண்டிருக்கிறதா என்ற கேள்வி திரும்பத் திரும்ப எழுகிறது. எனவே அற உணர்வுள்ளவர்களின் பங்களிப்பு அதீதமாகத் தேவைப்படுகிறது.

இந்தியாவில் அப்துல் கலாம், கிருஸ்ணையர், மார்க்கண்டேய கட்யு, அருந்ததி ராய், அமர்த்தியா சென், தென்னாபிரிக்காவில் டெஸ்மன் டுட்டு, அயர்லாந்தின் மேரி றொபின்சன், ஆபிரிக்காவின் வங்கரி மாத்தா, பிடல் கஸ்ட்ரோ, நெல்சன் மண்டெலா, அமெரிக்காவின் நோம் சோம்ஸ்கி, மியன்மாரின் ஆங்சாங் சுஜி இன்னும் இந்த வரிசையில் உலகளாவிய அளவில் பல சிறந்த மனிதர்களின் ஒருங்கிணைந்த பங்களிப்பு அவசியம்.

மக்கள், நாடு, உலகம் பற்றிய அக்கறை உள்ளவர்கள் உலக இராணுவ மயமாக்கம் பேரழிவுப்பாதையிலிருந்து உலகை மீட்கப் பாடுபட வேண்டும் காந்தியடிகளின் கருத்துக்களும் போராட்ட வழிமுறைகழும் உலகளாவிய அளவில் செல்வாக்குப் பெற்றது. அது இந்தியாவில் மட்டுமல்ல தென்னாபிரிக்கா, வட அமெரிக்கா வரை வியாபித்தது.

சமத்துவமற்ற உலக ஒழுங்கு மாற வேண்டும். மாக்ஸ், ஏங்கல்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பணி லெனின், றோசாலக்சம்பேர்க், ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின், மாவோ, லுமும்பா, அலன்டே இன்றைய சாவேசு வரை செயற்பட்டிருக்கிறார்கள். செயற்படுகிறார்கள்.

ஜவஹர்லால் நேரு, ஹோசிமின், சேகுவேரா போன்ற ஆளுமைகள் அறவழி உலகிற்காக பாடுபட்டார்கள். டால்ஸ்டாய், காந்தியடிகள், தாகூர், கான் அப்துல் கபார் கான், ஐன்ஸ்ரின் இவர்களுக்கிடையே உறவுகள் இருந்தன.

பாசிசம், காலனியாதிக்கத்திற்கெதிரான விழிப்புணர்வு காணப்பட்டது. பிரமாண்டமான அளவில் உயிரழிவுகள் நிகழ்ந்தாலும் பேரழிவுகளுக்கெதிரான சக்திகளும் தார்மீக பலம் உள்ளவையாக இருந்தன. மானிடத்தின் நல்வாழ்வு பற்றி அவர்கள் அக்கறை கொணஞ்ரீடிருந்தார்கள். இன்று அற உணர்வுகள் அருகிவிட்டன.

சுயநலமும் பெருவாரியான மக்களுக்கு அனர்த்தம் விழைவிக்கும் முறைகளே கடைப்பிடிக்கப்படுகின்றன. பங்கு மார்க்கட் பல்தேசிய கம்பனிகளின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சி- உலகின் வளர்ச்சி என்று சொல்லப்படும் கலிகாலத்தில் நாம் வாழ்கிறோம்.

இயற்கையை சூறையாடல், உலகம் முழுவதும் ஒருவிதமான பிரக்ஞையுமற்று நிகழ்கின்றன. இராணுவவாதம் உடல் மீதியின்றி அழித்தல் என்பன மிகவும் துணிச்சலாக நடைபெறுகின்றன. இதுவும் இயல்பானதே யதார்த்தமானதே என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

அதிகாரத்திற்கெதிரான போராட்டம் என்பது அப்பாவி மக்களின் உயிரைக் குடிக்கும் பயங்கரவாதமாக இருக்கமுடியாது.

மத இன அடிப்படைவாதங்களுக்கு எதிர்கால உலகில் இடமில்லை என்றாக வேண்டும். பூமியைப் பற்றிய பிரக்ஞை வேண்டும்.

எதிர்காலம் நிச்சயமற்றுப் போனதன் பின்னரும் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை தீவிரமாக எழவில்லை. இந்த நிலை மாற வேண்டும். உலகின் நல்ல சக்திகள் இணைய வேண்டும்.

தீய சக்திகளின் கட்டற்ற பெருக்கத்திற்கெதிராக இது நிகழவேண்டும். இங்கு தனி மனிதர்களின் பெயர்கள் மாதிரி இருந்தாலும் அவர்கள் உலக மக்களை ஆகர்சிக்க கூடியவர்கள். விரிந்த, பரந்த பார்வை உள்ளவர்கள்.

இவர்களைப் போன்றவர்கள் ஒருங்கிணைந்து உலகின் எதிர்காலம் பற்றிப் பேச வேண்டும். இதற்கான முன்னெடுப்புக்கள் அவசியமானது. உலகளாவிய அளவில் தொடர்பு கொண்ட உலக மானிட சமூக அக்கறை கொண்டவர்கள் இதனை மேற்கொள்ளலாம்.

---

# எங்கிருந்து தொடங்குகிறது

"உருகுவே நாட்டின் ஜனாதிபதி ஜோஸ் முஜிகாவின் (வயது 77) சொத்தின் மொத்த மதிப்பு 1800 டொலர்கள் (2 இலட்சத்து 16 ஆயிரத்து 400 ரூபா) தான். தினமும் தனது பழமையான வீட்டின் பின்புறமாகவுள்ள பண்ணையில் நாலைந்து மணித்தியாலங்களாவது வியர்வை சிந்த உழைப்பார். காலையில் தனியாக தனது பழைய காரில் சந்தைக்குப் புறப்படும் ஜோஸ் முஜிகா அங்கு தனது விவசாய விளை பொருட்களை விற்றுவிட்டு தனக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்புவார். அதன் பின்னர் அலுவலகத்திற்குச் சென்றால் இரவு வரை தலை நிமிராது பணிகளில் மூழ்கிவிடுவார். தன்னுடைய மாத வருமானத்தில் 90 வீதத்தை பொதுமக்களின் நலன்புரி நிதிக்காக வழங்கிவிடுகின்றார்.

இலங்கையின் 2013 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் இலங்கை ஜனாதிபதியின் வருடாந்த செலவினமாக 750 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் பரப்பளவில் இலங்கை போன்று 3 மடங்கு பெரியது உருகுவே. அத்துடன் உருகுவேயின் சனத்தொகை 3 கோடி 4 இலட்சத்து 63 ஆயிரம் இலங்கையின் சனத்தொகை 2 கோடி 2 இலட்சத்து 77 ஆயிரம் இலங்கையை விட பரப்பளவிலும் சனத்தொகையிலும் பெரிதான உருகுவே நாட்டு ஜனாதிபதியின் வருடாந்த சராசரி செலவினம் 10 இலட்சம் மட்டுமே"

இந்த ஒப்பீடு உதயன் பத்திரிகையில் வெளிவந்தது. இதனை வாசித்தபோது இந்த விமர்சனம் ஜனாதிபதிக்கு மட்டும் தான் பொருத்தமானதா? எம்மிடையே இந்த குணாம்சம் எவ்வாறு உருவாகிறது? என்ற கேள்விகளும் கூடவே எழுந்தது.

ஜனாதிபதியை விட்டுவிடுவோம். எந்த அரசியல் தலைவர் இத்தகைய வாழ்க்கை முறைக்குச் சம்மதம்?

அரசியல்வாதிகள் மட்டுமல்ல நாட்டின் பல்வேறு துறைகளை சார்ந்தவர்களுக்கும் இது பொருந்தும்.

எடுத்துக்காட்டாக வாழும் பலர் நம் மத்தியிலும் இல்லாமலில்லை. ஆனால், அத்தகையவர்களின் எண்ணிக்கை நாளுக்கு






அலுவலகத் தேவைக்காக வழங்கப்பட்ட வாகனங்களை சொந்த தேவைகளுக்காக பயன்படுத்தாத அதிகாரிகள், அதிகாரத்தில் உள்ளவர்களோடு சமரசம் செய்து தமது பிழைப்பை நடத்த மறுக்கும் ஊடகவியலாளர்கள், கடமையின் போது கை நீட்டாத பொலிஸ் உத்தியோகத்தர்கள், மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறுகிறோம் என்பதை உணர்ந்து பணி புரியும் அதிகாரிகள் கடமை நேரத்தில் பணத்திற்காக தனியார் வைத்தியசாலைகளின் பக்கம் செல்லாத வைத்தியர்கள், மக்களின் துயரங்களை போக்க உண்மையாக உழைக்கும் அரசியல் தலைவர்கள் இல்லாமலில்லை.

இவர்களுக்கு சமூகத்தில் என்ன பெறுமானம் இருக்கிறது. இவர்களைப் பற்றியெல்லாம் எமது ஊடகங்களும் கண்டு கொள்வதில்லை. எமது சமூகமும் கண்டு கொள்வதில்லை. எனவே இந்த நல்ல விழுமியங்கள் எம் மத்தியில் வியாபித்தி

இத்தகையவர்களை பிழைக்கத் தெரியாதவர்கள் என அடையாளப்படுத்தும் சமூகம் கண்ணுக்கு முன்னால் மக்களை ஏய்க்கும் அரசியல்வாதிகள், மோசடி செய்யும் வியாபாரிகள், குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கத் தெரிந்தவர்கள், லஞ்சலாவண்யங்களை கற்றுத் தேறிய அதிகாரிகள், அதிகார துஸ்பிரயோகத்தில் ஊறித் திழைக்கும் உத்தியோகத்தர்களை விண்

இவர்களுக்கு சமூகத்தில் கிடைக்கின்ற அங்கீகாரம் தான் சமூகத்தை மீள் உருவாக்கம் செய்கின்றது, கட்டமைக்கின்றது.

மோசடிகளுக்கும், துஷ்பிரயோகங்களுக்கும், சமூகம் வழங்கும் அங்கீகாரம் தான் மறுபுறத்தில் இளம் சந்ததி கெட்டழிகிறதே, கலாச்சாரம் சீரழிகிறதே என ஏங்கவைக்கும் பிறள்வுகளுக்கு விளைநிலமாயிருப்பதை மறந்துவிடுகின்றோம்.

பலரது உயிர்களுக்கும் உடமைகளுக்கும் உலைவைத்த வன்முறைக்கு, ஜனநாயக மறுப்புக்கு பின்னணியிலிருந்து செயற்பட்ட ஊடகவியலாளர்கள் ஜனநாயகத்தின் காவலர்களாக வலம் வர முடிந்தது எவ்வாறு?

கெட்டு நொந்து போயிருந்த தமிழ் சமூகத்தை சுரண்டிக் கொழுத்தவர்கள் உரிமைக் குரல் கொடுக்கும் உத்தமர்கள் என்ற மாயை விதைக்கப்பட்டது யாரால்?

அரசியலில் நேர்மையாக, உண்மையாக சமூகத்திற்காக உழைத்த இடதுசாரித் தலைவர்களை இந்த நாட்டு மக்கள் கண்டுகொள்ளாமல் போனது எதனால்?

ஒருவரிடம் மிகையாய் உள்ள பணமே அவரது சமூக அந்தஸ்த்தின் அளவுகோல் எனின் ஜோர்ச் முஜிகாவை போல வருமானத்தின் 90 வீதமல்ல எஞ்சிய 10 வீதத்தை கூட பொது நலனுக்காக செலவிட முன்வருபவர்களைக் காண்பது சிரமம் தான். நிதி உதவிகளை விட்டுவிடுவோம் சமூகத்திற்காக உடல் உழைப்பை வழங்குவதற்கு எம்மிடையே எத்தனை இளைஞர்கள் தயாராய் இருக்கிறார்கள்?

"விவசாயி சேற்றில் கைவைக்காவிட்டால் நாம் சோற்றில் கைவைக்க முடியாது" என்பது வார்த்தை ஜாலமாக உள்ளதே தவிர அந்த விவசாயிக்கு எங்கள் சமூகத்தில் என்ன அந்தஸ்திருக்கிறது?
வயலில் வேலைசெய்தால் என்ன வங்கியில் வேலை செய்தால் என்ன களிப்பறையிலோ கல்லூரியிலோ கடமை புரிந்தாலென்ன ஒருவர் செய்யும் தொழிலை வைத்து அவரது சமூக அந்தஸ்து மதிப்பிடப்படாத சமுதாயத்தில் தான் இது

படிப்பகம்